1-15 ஜன. '93

www.padippakam.com

ரூபாய் 2.50

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

## கம்பளத்திலும், கண்ணாடியிலும் கருகும் இளம் மலர்கள்

குழந்தை உழைப்பை தடை செய்யும் சட்டங்கள் இருப்பினும், உ.பி. மிர்ஸாபூர் மாவட்டத்திலும், பெரோஸாபாத் பகுதியிலும் நடத்தப்பட்ட ஆய்வுகள் அதிர்ச்சியையே அளிக்கின்றன. மிர்ஸாபூர் மாவட்டத்தில் மட்டும் கம்பளம் பின்னும் தொழிலில் 1 லட்சம் குழந்தை உழைப்பாளிகள் உள்ளனராம். முதல் மூன்று வருடங்களுக்கு சம்பளமில்லாமல் வேலை செய்யும் இவர்கள் அடுத்த வருடங்களில் 15 மணி நேர உழைப்புக்கு பெறும் கூலி ரூ. 3/- முதல் ரூ. 5/- வரை மட்டுமே. பெரோஸாபாத் பகுதியில் கண்ணாடி தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் 50,000 குழந்தைகள், 700 டிகிரியிலிருந்து 1800 டிகிரி சென்டிகிரேடு வரை வெப்பமுள்ள சூளைகளின் அருகே அமர்ந்து தினமும் 12 மணி நேரம் வேலை செய்கின்றனர். இதற்கு இவர்கள் பெறும் கூலி ரூ. 8/- முதல் ரூ. 11/- வரை. இவர்கள் எங்கும் தப்பிப் போக முடியாத அளவுக்கு மாஃபியாக்களின் கண்காணிப்பும் உள்ளதாம். ஆண்டு தோறும் நவ. 14-ஐ குழந்தைகள் தினமாக கொண்டாடும் ஆட்சியாளர்களின் மண்டையில் இவ்வுண்மைகள் ஏறுமா?

## 'தியாகி' பட்டங்கள் விற்பனைக்கு

இடைத் தரகனுக்கு ரூ.2,000/- கொடுத்தால் போதும்; 'சுதந்திரப் போராட்டத் தியாகி' என்ற பெயரில் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து மாதந்தோறும் ரூ.300 முதல் ரூ.1000 வரை ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளலாம். இது நடப்பது ஒரிஸ்ஸாவில். சமீபத்தில் 350 போலி தியாகிகளை விசாரணை நடத்தி கண்டு பிடித்துள்ளனராம். பெற்றதே போலி சுதந்திரம் தான் எனும்பொழுது, தியாகிகளிலும் போலி இருப்பதில் வியப்பில்லைதானே?!

## அறிவியல் ஆராய்ச்சியின் அடிமடியில் கைவைக்கும் அரசு

பாதுகாப்பு என்ற பெயரில் வருடாந்திர பட்ஜெட்டில் ரூ. 15,000 கோடி வரை செலவழிக்கும் அரசு, அடிப்படை தொழிற்துறை மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ரூ.500 கோடிக்கும் குறைவாகவே ஒதுக்கி வருகிறது. மூன்று வருடங்களுக்கு முன்னால் மொத்த தேசிய உற்பத்தியில் 1 சதவீதத்தை ஒதுக்கி வந்த அரசு, தற்சமயம் 0.88 சதவீதம்தான் ஒதுக்கி வருகிறது எனக் கூறும் விஞ்ஞானிகள், இத்தொகை பிற வளரும் நாடுகள் ஒதுக்கும் தொகையைவிட மிகக் குறைவானது எனவும் சுட்டிக் காட்டுகின்றனர். இந்நிலையில் ஏற்கனவே உள்ள சி.எஸ்.ஐ.ஆர். போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களையும் இழுத்துமூட எத்தனிக்கிறது இந்திய அரசு.

## நோய்க்கிருமிகளை வாரிவழங்கும் பிரான்சு அரசு

பாமுதலாளித்துவ அரசுகள் தனது குடிமக்கள் அனைவருக்கும் அடிப்படை மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க பெருமுயற்சிகள் செய்து வருவதாக மார்



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

தட்டிக் கொள்கின்றன. ஆனால், பிரான்சில், மருத்துவ மனைகளுக்கு இரத்தம் வழங்குவதாக நடந்துள்ள ஊழல் ஆள்வோரின் பொய் முகத்தை மக்களிடம் திரை கிழித்துக் காட்டியுள்ளது. தொற்று நோய்க்கிருமிகள் கொண்ட இரத்தத்தை வழங்கிய தன் விளைவாக, 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனராம். சாதாரண வைரஸ் கிருமிகளிலிருந்து, ஆட்கொல்லி எய்ட்ஸ் நோய்க் கிருமியான HIV வரை இரத்தம் பெற்றுக் கொண்டவர்களைப் பாதிக்க வாய்ப்புகளுண்டு. இந்த லட்சணத்தில் 'எயிட்சை நாங்கள் ஒழித்துவிடுவோம்' என நம்மை நம்பச் சொல்கின்றார்கள்.

## கின்னஸ் சாதனைக்கு முயலும் இடதுகள்!

மேற்கு வங்க அரசால், கிராமப்புற தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஒட்டு மொத்தமாக ஆட்குறைப்பு செய்யப்பட்டதைக் கண்டித்து, ஆசிரியர் சங்கங்கள் 1,100 நாள்களுக்கும் மேலாக தொடர் உண்ணாவிதரப் போராட்டம் கல்கத்தாவில் நடத்தி வருகின்றன. புதிய பொருளாதார கொள்கையின் விளைவாக தொழிலாளர்கள் ஆட்குறைப்பு செய்யப்படுவதைக் கண்டிக்கும் 'மார்க்சிஸ்டு'களே, இதைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. 'மார்க்சிஸ்டு'கள், இச் சாதனையை கின்னஸுக்கு விளக்கி எழுதி, உலக முதலாளிகளின் நன்மதிப்பைப் பெற முயலலாம்!

**கல்கத்தாவில், வேலை நீக்கத்திற்கு எதிராகப் போராடும் ஆசிரியர்கள்**



## வங்கி வளர வறியோனை வயிற்றில் அடி!

தனிப்பட்ட நபர்கள் ஊழலும், திருட்டுத்தனங்களும் புரிந்தால், சட்டப்படி தண்டிக்கலாம். ஆனால் அரசு சார்ந்த நிறுவனங்களே அவ்வாறு இருந்தால்? மகாராஷ்டிராவிலுள்ள இரண்டு கூட்டறவு வங்கிகள், தங்களின் வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டிய கடனை 'எனக்கு முழுத் தொகையும் தேவையில்லை' என அவர்களிடமிருந்து ஓர் அறிக்கையினைப் பெற்றுக் கொண்டு அத்தொகையினை உரியவர்களுக்கு வழங்காமல் தங்களது கணக்கிலேயே வைத்துக் கொண்டுள்ளன. இதனுடன் மானியத் தொகையிலிருந்து ரூ.1000 வரை தங்களின் மூலதனப் பங்காக பெற்றுக் கொண்டு, மீதமுள்ள தொகையையே கொடுத்து வந்திருக்கின்றன. இம்முறைகேடு குறித்து விசாரணை நடந்த பொழுது, ''வங்கியின் வளர்ச்சிக்காக'' செய்தோம் என்றனராம் அதிகாரிகள். ஹர்ஷத் மேத்தா விவகாரத்திலும் இப்படித்தான் சொல்லின, அரசுடைமை வங்கிகள். வங்கியின் வளர்ச்சி, இல்லாதவனின் வயிற்றில் அடிக்கும் சிறந்த 'மக்கள் நலக்' கொள்(கை)ளை!

## நாடாளுமன்றம் நாட்டின் வெளியே!

ரூபாயை முழுவதுமாக தடையின்றி மாற்றிக் கொள்ளவும், 120 கோடி டாலர் பெறுமான அரசு பங்குகளை தனியாருக்கு விற்கவும் கொள்கை ரீதியாக முடிவெடுக்கப்பட்டுள்ளது என மத்திய நிதி மந்திரி உலகப் பொருளாதார மையக் கூட்டத்தில் பேசியுள்ளார். ''இம் முடிவு பாராளுமன்றத்தில் விவாதித்து எடுக்கப்படவில்லை; இது பாராளுமன்றத்தை அவமானப்படுத்துவதாகும். எனவே, மன்மோகன் சிங் மன்னிப்புக் கேட்க வேண்டும்'' என எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன. சபாநாயகரோ இப்பிரச்சினையை முறையாக எதிர்க்கட்சிகள் எழுப்பவில்லை எனக்கூறி விவாதத்தை தடுத்து விட்டார்.

## குடும்பக் கட்டுப்பாடு அரியானா போலிசின் பாணி

கால்நடைகளுக்கு காயடிப்பது பற்றி கேள்விப்பட்டிருப்போம். மனிதர்களுக்கும் செய்யலாம் என்கிறது அரியானா போலீசு. 20 வயதான பிஷாம்பர் என்ற தாழ்த்தப்பட்ட வாலிபரை சிறு திருட்டுக்காக சந்தேகத்தின் பேரில் பிடித்துச் சென்ற போலீசு, அவரது அந்தரங்க பகுதிகளையே குறிவைத்துத் தாக்கப்பட்டதால்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்கின்றார்கள் மருத்துவர்கள். இச் சம்பவம் காரணமாக, ''கடமை தவறியதற்காக'' ஒரு உதவி காவல்துறை கண்காணிப்பாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இனி என்ன! குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மருத்துவத் துறையிலிருந்து, காவல்துறைக்கு மாற்றுவதை பற்றி அரசு யோசிக்கலாம்! ●

படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு*

எட்டாம் ஆண்டு

3 - 4

டிசம். 16 '92 — ஜன. 15 '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

### மில் தொழிலாளர் போராட்டம்!

# படிப்பினைகளை மறவாதீர்! ஒற்றுமை, உறுதி குலையாதீர்!

பாசிச ஜெயா அரசின் அச்சுறுத்தல், தடைகளை மீறி கடந்த டிசம்பர் 15-ந் தேதி முதலாக தமிழகம் முழுவதும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் துரோகம் - தோல்விகளுக்கு எதிராக, நியாயமான உரிமைக்காக அவர்கள் போராடி வருகிறார்கள். தமிழகத்திலுள்ள நெசவாலைகள் - நூற்பாலைகளைப் பொருத்தவரை, 1987-ல் போட்ட ஐந்தாண்டு ஒப்பந்தம் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. ஊதிய உயர்வுக்கான புதிய ஒப்பந்தம் போடக் கோரி தொழிற் சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தபோதிலும் ஆலை நிர்வாகங்களும் அரசும் அலட்சியப்படுத்தி வந்தன. கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக தொழிற் சங்கங்கள் ஊதிய உயர்வு உட்பட 30 கோரிக்கைகளை முன்வைத்துப் பேச்சு வார்த்தை நடத்திய போதிலும் தென்னிந்திய மில் முதலாளிகளின் சங்கமான (SIMA) 'சீமா' அவற்றைப் பிடிவாதமாக ஏற்க மறுக்கிறது. மறுபுறம், உற்பத்தித் திறனுடன் கூடிய சம்பள உயர்வு பற்றித்தான் பேச முடியும்; ஆலைகளை நவீனப்படுத்த வேண்டியிருப்பதால் தொழிலாளர்களுக்கு லாபத்தில் பங்கு தரமுடியாது; சீமா சங்கத்துடன் அல்லாமல் தனித்தனி ஆலை நிர்வாகத்துடன்தான் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என மில் முதலாளிகள் எதிர் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் நடுநிலை நாடகமாடிக் கொண்டே முதலாளிகளின் கையாளாகச் செயல்பட்டுவரும் தமிழக அரசு, தொழிலாளர்களின் நியாயமான வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தடை விதித்து, பிரச்சினையை தொழிற் தகராறு நடுவர் மன்றத்துக்கு (Tribunal) அனுப்பி வைத்து, இடைக்கால நிவாரணமாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 50 முதல் ரூ. 125 வரை ஆலை நிர்வாகம் தரவேண்டுமென தமிழக அரசு அறிவித்துள்ளது. இது பிரச்சினையைத் தீர்க்காமல் காலவரையின்றி இழுத்தடித்து தொழிலாளர்கள் உடனடியாக நிவாரணம் பெறுவதைத் தடுக்கும் முயற்சியேயாகும். ஏனெனில் 1985-ல் இதேபோல் பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராடிய போது, வரதன் தலைமையிலான நடுவர் மன்றத்துக்கு கோரிக்கைகள் அனுப்பப்பட்டது. ஆனால், அது 1987-ல்தான் தீர்ப்பளித்தது. இப்போது பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்வுக்கு விட்டுவிட்ட அரசு ஒருதலைப்பட்சமாகத் தொழிலாளர்மீது பழிபோட்டு, அவதூறு பேசியும், மிரட்டியும் வருகிறது. எனவேதான், அரசின் சூழ்ச்சிகளை அனுபவபூர்வமாக உணர்ந்துள்ள தொழிலாளர்கள், நடுவர் மன்றம், பேச்சுவார்த்தை முதலானவற்றைப் புறக்கணித்து தமிழகம் முழுவதுமுள்ள 800 மில்களைச் சேர்ந்த ஏறத்தாழ 2.5 லட்சம் தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு கிளர்ந்தெழுந்துள்ளனர். முன்பு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வந்துபோன தொழில் நெருக்கடி இப்போது நிரந்தரமாகியிருப்பதையும், அடுத்தடுத்து ஆலைகள் நலிவுற்று மூடப்படுவதையும், கடந்தகால போராட்ட அனுபவங்களையும் தொழிலாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். முற்றிலும் தொழிலாளர் விரோத, தேசவிரோதப் பொருளாதாரக் கொள்கைகளை அப்பட்டமாகவே அறிவித்து அமுலாக்கி வருகிறது, மத்தியிலுள்ள ராவ் அரசு. இதற்காகவே தொடர்ந்து பல கருப்புச் சட்டங்களையும், தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. பழைய வகை துணி ஆலைகளை மூடிவிட்டு இயந்திரமயமான, நவீன 'காம்போசிட்' ஆலைகளை நிறுவுவதே அதன் நோக்கமாக உள்ளது. முன்பு பாசிச இந்திரா ஆட்சிக் காலத்தில், பம்பாய் துணி ஆலைத் தொழிலாளர்கள் போராடிய போது, போராட்டத்தை ஈராண்டுகளுக்கு இழுத்தடித்து இதே நோக்கத்திற்காக ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்தனர்.

மத்திய அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை முழு மூச்சோடு அமுல் படுத்துவதில் பாசிச ஜெயா கும்பல் முனைப்பாக உள்ளது. ''ஸ்பிக்'', அரசு சிமெண்ட் போன்ற தொழில் நிறுவனங்கள் பலவற்றையும், மின் உற்பத்தி, சாலை போடுவது முதல் கல்லூரிகள் நிறுவுவது வரை அனைத்தையும் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொள்ளையடிக்கிறது. இதுவரை 20 ''டான்சி'' நிறுவனங்களை மூடி தொழிலாளர்களை வெளியேற்றுகிறது. இதோடு தொழிலாளர், மாணவர், ஆசிரியர், அரசு ஊழியர் என்று எவர் போராடினாலும் தனது முன்னோடியான பாசிச எம்.ஜி.ஆரின் வழியிலேயே அடக்கி ஒடுக்குகிறது. 1979 - 80 இல் தமிழகத்தில் வெடித்துக் கிளம்பிய டி.வி.எஸ். - டி.ஐ. சைக்கிள்ஸ் - மேட்டூர் ஆலை - கோவை லட்சுமி மிஷின் ஒர்க்ஸ் போராட்டங்கள் மீது எம்.ஜி.ஆர். பாசிசத் தாக்குதல் நடத்தி ஒடுக்கினார். அப்போது போலிக் கம்யூனிஸ்டுகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட தொழிற்சங்க இயக்கம் கடந்த 12 ஆண்டுகளில் தலை நிமிரவே முடியவில்லை.

அதன் படிப்பினைகளைப் பெறாது வழக்கமாகப் பின்பற்றி வரும் துருப்பிடித்த போராட்ட முறைகளையே - தோற்றுப் போன பாதையையே போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து தொழிற் சங்கங்களும் கடைபிடிக்கின்றன. மீண்டும் முத்தரப்பு பேச்சு வார்த்தை என போராட்டத்தை இழுத்தடித்துப் பிசுபிசுக்கச் செய்யும் பாதையிலேயே அவை செல்கின்றன. கடுமையான அடக்குமுறை, தோல்விக்கும் பிறகு தொழிலாளர்கள் முற்றாக நம்பிக்கையிழந்து முடமாகிப் போவதற்குத்தான் இது வழிவகுக்கும். எனவே புரட்சிகர அரசியல் குழுக்களை தமது ஆலைகளில் நிறுவி தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தொழிற்சங்கத் தலைமையின் துரோகத்தை விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டும். இன்றைய போராட்ட ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் நாளைய வெற்றியைச் சாதிக்கவும் இது அவசியமாகும்.

19.12.92

படிப்பகம்

www.padippakam.com

## பார்ப்பன பாசிஸ்டுகளின் கூட்டணி:

# டெல்லிக்கு அத்வானி தமிழகத்துக்கு அல்லிராணி

பார்ப்பன கழுதையைப் பஞ்சகல்யாணி குதிரையாக்கிக் காட்ட திராவிடத் தெனாலிராமன்கள் நடத்திய மோசடி, கடைசியில் அம்பலமாகிவிட்டது. "நான் திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி" என்று தனக்குத்தானே தம்பட்டம் அடித்துக் கொண்ட ஜெயா, தனது முகமூடியைப் பிய்த்தெறிந்துவிட்டு தனது இந்துவெறி பார்ப்பன சுயரூபத்தை பகிரங்கமாகக் காட்டிவிட்டார். அயோத்தியிலுள்ள பாபர் மசூதியை இடிக்க இந்து-வெறியர்களின் கரசேவையை வெளிப்படையாக ஆதரித்து, ஆயிரம் குண்டர்களை அயோத்திக்கு அனுப்பியதன் மூலம் இந்துவெறி பாசிச நாயகி என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார்.

தனது இந்துவெறி பாப்பன குணத்தை திராவிட அங்கிக்குள் மறைத்து மாய்மாலம் செய்துவந்த ஜெயா, அரசியல் ரீதியாக ஒரு சாதகமான சூழ்நிலை கிடைத்ததும் அதை பகிரங்கமாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். அண்மைக் காலமாக ஜெயா கும்பலின் பாசிச அட்டூழியங்களும் ஊழல் கொள்ளையும் மக்களிடம் அம்பலப்பட்டு, எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஜெயா கும்பல் மீது குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளன. போதாக்குறைக்கு கூட்டணி கட்சியான காங்கிரசுக்குள்ளேயே மூப்பனார் கோஷ்டியினர், தமிழகத்தில் மீண்டும் காமராசர் ஆட்சியை நிறுவுவோம் என்று ஜெயா கும்பலுக்கு எதிரான இயக்கத்தை நடத்திவருகின்றனர். மறுபுறம் காங்கிரசின் மறைமுக ஆதரவுடன் அரசியல் தரகர் சுப்பிரமணிய சாமி, நல்லாட்சி இயக்கம் என்ற பெயரில் ஜெயா கும்பலின் ஊழல், கிரிமினல் குற்றங்களைப் பட்டியல் போட்டு மிரட்டி வருகிறார். இந்நிலையில், ஜெயா கும்பலின் அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றங்களின் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால் இன்று ஜெயா கும்பலுக்கு உதவ வேறு எந்த பெரிய கட்சியும் இல்லை. எனவே தான் காங்கிரசுக்கு எதிர்க் கட்சியான வட நாட்டு பாரதீய ஜனதாவை தனது நம்பகமான கூட்டணிக் கட்சியாக ஜெயா அடையாளம் கண்டிருக்கிறார். 'கை'யைக் கைவிட்டு தாமரையில் தஞ்சம் புகுவதன் மூலம், மத்தியிலுள்ள காங்கிரசு அரசு தனது ஆட்சியைக் கவிழ்ப்பதில் அல்லது நெருக்கடி கொடுப்பதில் தயக்கம் காட்டும் என்று அவர் கணக்குப் போட்டார்.

இதன்படி, அயோத்தி விவகாரத்தையொட்டி நவம்பர் மத்தியில் டெல்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் கூடடத்தில் கலந்து கொண்ட ஜெயா, "ராமர் கோயில் கட்ட கரசேவைக்கு அனுமதிக்க வேண்டும்; நாட்டின் பெரும்பாலான மக்களின் ஒருமித்த கருத்து இது" என்று இந்து வெறியர்களின் குரலை எதிரொலித்தார்.

"பெரும்பான்மையினரின் (இந்துக்களின்) உரிமைகளைச் செயல்பட விடாமல் சிறுபான்மையினர் (முஸ்லிம்கள்) தடுக்க முற்படக்கூடாது. சர்ச்சைக்குரிய பகுதியில் கோயில் கட்டும் கரசேவையை அனுமதித்தாக வேண்டும். சிறுபான்மை மக்கள் அனுபவிக்கும் உரிமையை பெரும்பான்மை மக்களும் அனுபவிக்க வாய்ப்பு தரவேண்டும். சட்டச் சிக்கலைக் காட்டி கரசேவையை ஒத்திப்போட முடியாது நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. சட்டத்தின் மூலம் ஏற்படும் தடைகளை நீக்கி கோயில் கட்ட அனுமதிக்க வேண்டும். காவிரிப் பிரச்சினையில் கர்நாடகா அரசை டிஸ்மிஸ் செய்யாத மத்திய அரசு, கரசேவை பிரச்சினையில் உ.பி. அரசை டிஸ்மிஸ் செய்ய முயல்வது தவறு" என்று இந்து வெறியர்களின் நிலைப்பாட்டைப் பிரதிபலித்தார்.

பாரதீய ஜனதாவின் கொள்கை பரப்புச் செயலாளராக மாறிய ஜெயா, பாரதீய ஜனதா தயாரித்துக் கொடுத்த அறிக்கையையே தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்தில் வாசித்தார். இதற்காகவே ஜெயா டெல்லி சென்றபோது பாரதீய ஜனதாவின் தமிழகப் பிரதிநிதியான கோவிந்தாச்சார்யாவும் டெல்லிக்குச் சென்றார். தேசிய ஒருமைப்பாட்டு கூட்டத்திற்கு முன்பாக ஜெயா, கோவிந்தாச்சார்யாவைச் சந்தித்துள்ளார்.

அயோத்தி விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க பிரதமருக்கு முழு அதிகாரம் அளிப்பதாக தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சில் கூட்டத்தில் எல்லாக் கட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றியபோது, அதைச் சகித்துக் கொள்ள முடியாத ஜெயா, அக்கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தார். இக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்த இந்துவெறி பாரதீய ஜனதா கட்சி, தனது குரலை எதிரொலிக்கவே ஜெயாவை இக்கூட்டத்திற்கு அனுப்பியுள்ளது. டெல்லியிலிருந்து திரும்பிய பின்னர். சட்டத்தைக் காட்டி கரசேவையைத் தடுக்காதீர்கள் என்று பிரதமருக்கு ஜெயா கடிதமும் எழுதினார்.

அயோத்தி விவகாரத்தில் இந்து வெறியர்களுக்கு ஆதரவாக வெளிப்படையாக ஜெயா பேசியதும், தமிழகத்திலுள்ள இந்து முன்னணி ஜெயாவுக்கு நன்றி தெரிவித்து சுவரொட்டிகளை ஒட்டியது. "ஜெயா ஆட்சியைக் கவிழ்த்தால் தமிழகத்தில் பிரிவினைச் சக்திகள் பெருகிவிடும்; ஜெயாவைப் பதவி நீக்குவதால் எழும் வெற்றிடத்தை நிரப்பும் அளவுக்கு இங்கே யாருமில்லை. அ.தி.மு.க. அரசைக் கவிழ்ப்பதன் மூலம் சுப்பிரமணியசாமியும் காங்கிரசும் ஆதாயமடையப் பார்க்கிறார்கள்" என்று பாரதீய ஜனதாவின் கோவிந்தாச்சார்யா பரபரப்பாகப் பேட்டியளித்தார்.

ஜெயாவின் இந்துவெறி ஆதரவு நிலைப்பாட்டை தமிழக எதரிக்கட்சிகள் அம்பலப்படுத்தத் தொடங்கியதும், அதைக் கண்டு ஜெயா அரண்டுவிடவில்லை. தனது செயலை நியாயப்படுத்தி, அ.தி.மு.க. கட்சி சார்பில் விளக்கக் கூட்டங்கள் என்ற பெயரில் கரசேவை ஆதரவுப் பொதுக்கூட்டங்களை நடத்தினார். கொத்தடிமை மந்திரிகள் பத்திரிகைகளில் எதிர்த்தரப்பினரைச் சாடி அறிக்கைப் போரை நடத்தினர். எல்லாவற்றுக்கும் மேலாக, "அத்வானி என்னுடைய மூத்த அரசியல் சகா" என்று தினமணி நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் இந்து வெறி தலைமைத் தளபதிக்குப் புகழாரம் சூட்டினார், ஜெயா. அதைத் தொடர்ந்து கடந்த ஓராண்டு காலமாக நரசிம்மராவின் பொருளாதாரக் கொள்கைகள் மீது எதிர்க்கருத்து ஏதும் கூறாமல் ஆதரித்து வந்த அ.தி.மு.க. நவம்பர் 25-ந் தேதியன்று ராவ் அரசின் பொருளாதாரக் கொள்கைகளை

சதியாலோசனையிடும் இந்துவெறி பாசிஸ்டுகள் அத்வானி, ஜெயா





படிப்பகம்

அயோத்தியில் பாபர் மசூதியை இடிக்க பார்ப்பன ஜெயாவின் ஆசியோடு 1,000 அ.தி.மு.க. குண்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சியூட்டும் செய்தி மெதுவாகக் கசிந்துள்ளது. இத்தகவலை லக்னோவைச் சேர்ந்த விசுவ இந்து பரிஷத்தின் முக்கிய நிர்வாகி குலாப்சிங் பரிவார் வடநாட்டுப் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். அரசியல் தரகரான சு.சாமியும் தன்னிடம் வீடியோ பட ஆதாரம் உள்ளதாகக் கூறுகிறார். தி.மு.க.வும் முஸ்லிம் லீகும் ஜெயாவின் இந்துவெறி - பார்ப்பன விசுவாசத்தை அம்பலப்படுத்தத் தொடங்கியதும், அப்படி எதுவுமே நடக்கவில்லை; அப்பட்டமான பொய் என்று எகிறிக் குதிக்கிறது ஜெயா கும்பல். தன்னை விமர்சிப்போர் மீது அடுக்கடுக்காக அவதூறு வழக்கு தொடுத்துள்ள ஜெயா கும்பல், இந்த விவகாரத்தில் எதிர்த்தரப்பினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதிலிருந்தே தெரியவில்லையா, திருடனுக்கு தேள் கொட்டியது போலிருப்பது!

எதிர்த்து எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து திடீரென வெளிநடப்பு செய்தது.

பாரதீய ஜனதா மீது திடீர் பாசம் வந்தது போல், புதிய கூட்டணிக்கு ஜெயா முயற்சிக்கத் தொடங்கியதும், "காங்கிரசு - அ.தி.மு.க. கூட்டணி முறிவு; ஆட்சிக் கலைப்பு உறுதி" என்று தமிழக கிசுகிசு பத்திரிகைகள் பரபரப்பாக செய்திகளை வெளியிடத் தொடங்கின. காங்கிரசின் போக்கினால் அதிருப்தி அடைந்துள்ள ஜெயா, உணர்ச்சி வசப்பட்டு கூட்டணியை முறித்துக் கொள்வது சரியல்ல என்று பார்ப்பன பத்திரிகைகள் புத்திமதி கூறின. தமிழக பத்திரிகைகளும் அரசியல்வாதிகளும், ஜெயா அவசரப்பட்டு கூட்டணியை முறித்துக் கொள்வதாகவும், காங்கிரசின் போக்கே இதற்குக் காரணம் என்றும் புதிய வியாக்கியானங்களை அளித்தனர்.

ஆனால், இத ஒருபக்க உண்மைதான். உண்மையில், பாசிச ஜெயா அடிப்படையிலேயே இந்துவெறித் தன்மை கொண்டவர் தான். ஆட்சிக்கு வந்ததும் முதல் வேலையாக அவர் இந்துக் கோயில்களைப் பாதுகாக்க தானே வசூல் வேட்டையை நடத்திக் கோடி கோடியாய் கோயில் பாதுகாப்பு நிதி என்ற பெயரில் வாரிக் கொடுத்தார். இந்துக் கோயில்களைப் பராமரிக்கவும், முறையாக ஆறுகால பூசைகள் நடத்தவும் கோயில் வாரியத்தை அமைத்தார். இந்து சனாதன தர்மத்தை மீண்டும் நிலைநாட்டும் நோக்கத்தோடு வேதாகம கல்லூரியைத் துவக்கினார். எதிரத்தரப்பினர் இதை விமர்சிக்கத் தொடங்கியதும், "நான் பாப்பாத்திதான்; என்னை யாரும் அசைக்க முடியாது" என்று திமிராக சட்டசபையிலேயே எச்சரித்தார். உத்திரப் பிரதேச பாரதீய ஜனதா முதல்வர் கல்யாண்சிங்கை வரவேற்று தமிழகத்திலுள்ள இந்து வெறியர்கள் புதுத் தெம்பு அடைய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார்.

பார்ப்பன பத்திரிகைகள் சித்தரிப்பது போல, அரசியல் காரணங்களால் மட்டும் பாரதீய ஜனதாவை ஜெயா ஆதரித்ததாக கருத முடியாது. அவரது இந்துவெறி ஆதரவு நிலை இன்று திடீரென ஏற்பட்ட விபத்தும் அல்ல. "இந்துக்களின் விருப்பத்தைப் புரிந்துகொண்டு முஸ்லிம்கள் பாபர் மசூதியை விட்டுக் கொடுக்க வேண்டும்" என்று முன்பு அறிக்கை விட்டவர்தான் ஜெயா. பாக். வசமுள்ள காஷ்மீரை இந்தியா கைப்பற்ற வேண்டும் என்று ஏற்கனவே பாரதீய ஜனதாவின் கொள்கையைப் பேசியவர்தான் ஜெயா. உடையாரிடம் மருத்துவக் கல்லூரியை ஒப்படைத்தபோதும், தனியார் துறையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை ஆரமம்பிக்க முடிவு செய்த போதும், சிறுபான்மை மதப் பிரிவினருக்கு மட்டும் சலுகைகள் உள்ளன; பெரும்பான்மையினரான இந்துக்களுக்கு சலுகை தரக்கூடாதா? என்று இந்து மத வாதத்தை முன் வைத்து நியாயப்படுத்தினார். மண்டல் அறிக்கை - இட ஒதுக்கீடு விவகாரத்திலும் அவர் பாரதீய ஜனதாவின் நிலைப்பாட்டையே மறைமுகமாக ஆதரித்து வந்துள்ளார்.

எனவேதான் அயோத்தியில் இந்து வெறியர்கள் இறுதிப்போர் நடத்தப் போவதை அறிந்ததும் பெரு மகிழ்ச்சியுடன் கரசேவையை ஆதரித்தார்.

ஆகவே, பாபர் மசூதியை இடித்த இந்து வெறியர்கள் மட்டுமல்ல; அதை ஆதரித்து நியாயப்படுத்திய பாசிச ஜெயாவும் கிரிமினல் குற்றவாளி! கரசேவையை ஆதரித்தவர் என்ற முறையில் பாசிச ஜெயாவும், பாபர் மசூதி இடிப்புக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

ஆனால், நிலைமை விபரீதமாகிப் போய்விட்டதால், அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட நிலைக்கு ஆளாகியுள்ளார் ஜெயா. எனவேதான் பாபர் மசூதி இடிக்கப் பட்டதற்கு கண்டனம் தெரிவித்ததோடு, எதிர்க் கட்சிகளோடு சேர்ந்து தமிழகத்தில் கடையடைப்புப் போராட்டத்தை அறிவித்து தன்னை குற்றமற்றவராகக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார். ஆனால், பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தளம் ஆகிய இந்துவெறி அமைப்புகள் தடை செய்யப் பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் அதன் துணை அமைப்புகளான இந்து முன்னணி, பிராமணர் சங்கம் முதலானவற்றை இன்று வரை ஜெயா தடை செய்யவில்லை. "இது நம்மவா் ஆட்சி" என்ற திமிரில், "மசூதியை இடித்தது நியாயம்தான்; இனிமேலும் அங்கே மசூதியைக் காட்டி நெருப்போடு விளையாடாதீர்கள்" என்று தமிழக பார்ப்பன கும்பல் கொக்கரிக்கிறது.

எனவே தமிழகத்தில் இந்து வெறியர்களின் அரணாகச் செயல்படும் பாசிச ஜெயா கும்பலின் பசப்பல்களை நம்பி தமிழக மக்கள் ஏமாந்துவிட முடியாது. பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலை அம்பலப்படுத்தி முறியடிக்காமல், இந்துவெறி பாசிசத்தின் அடிப்படையைத் தகர்த்தெறியவும் முடியாது.

● பாலன்

# விலையேற்றம் தவிர்க்க முடியாதது தொடர்ந்து ஆதரிப்பீர்

**அன்பார்ந்த வாசகர்களே!**

கடந்த 16-31 டிசம். '92 இதழை உரிய தேதியில் கொண்டுவர இயலாமல் போனதால் இரு இதழ்களையும் சேர்த்து வெளியிட்டுள்ளோம். தங்களுக்கு உறுதி கொடுத்தபடி இதழை முறையாக கொண்டுவர முயன்றும் முடியாமல் போனதை எண்ணி பெரிதும் வருந்துகிறோம். இத் தாமதத்திற்குரிய காரணங்களுள் நிதி நெருக்கடியே முக்கியமான ஒன்றாக உள்ளது. நிதி நெருக்கடி என்பது இதழ் தோறும் சுமை கூடியவண்ணமே உள்ளது. முகவர்கள் நிலுவை வைக்காமல் நிதியனுப்பி உதவும் பொழுதும் வாசகர்கள் சந்தா மற்றும் நன் கொடை கொடுத்து உதவும் பொழுதும் மட்டுமே நிதி நெருக்கடியைத் தவிர்க்க முடியும் என்பதை பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம். தங்களது முழுமையான ஒத்துழைப்புக் கிட்டினால் நிதி நெருக்கடியைத் தவிர்த்து இதழை கிரமமாகக் கொண்டு வர ஏதுவாக இருக்கும்.

மேலும் பத்திரிக்கையை நட்டமின்றி நடத்திக் கொண்டிருந்த நிலை போய் நட்டத்தோடு பல மாதங்களாக நடத்திக் கொண்டிருக்கிறோம். இதழ் தாமதமாக வந்தபொழுது பக்கத்தை கூட்டி வெளியிட்ட பொழுது கூடுதல் நட்டமாகியது எனினும் அவசியம் கருதி வெளியிட்டோம். இதுவல்லாமல் இதழ் தயாரிப்பு செலவு இதழ்தோறும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அச்சிடும் தாள் விலை அச்சுக்கூலி முதலியவை நிலையாக இல்லாமல் ஏறுமுகமாகவே உள்ளது. இந்நிலையில் பத்திரிகையின் விலையைக் கூட்டினாலே நட்டத்தை தவிர்க்க முடியும் என்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தவிர்க்க முடியாமல் விலையை 50 பைசா கூட்டி 3 ரூபாய் ஆக்குகிறோம். அடுத்த இதழிலிருந்து சில கூடுதல் பக்கங்களோடு 3 ரூபாய் விலையில் புதிய ஜனநாயகம் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். லாப நோக்கமற்ற முறையில் கருத்துக்காக கொள்கைக்காக நடத்தப்படும் புதிய ஜனநாயகம் போன்ற சிறுபத்திரிகைகளுக்கு ஏற்படும் நிதி நெருக்கடியை தாங்கள் புரிந்துகொண்டு தொடர்ந்து ஒத்துழைப்பீர் என நம்புகிறோம்.

மற்றபடி கடந்த இதழிலும் இந்த இதழிலும் பங்குப் பத்திர ஊழல் தொடர்பான கட்டுரையின் தொடர்ச்சியை வெளியிட இயலாமல் போய்விட்டது. இந்த இதழில் அயோத்தி சிறப்புக் கட்டுரை காரணமாக வழக்கமாக வரும் கேள்வி பதில் போன்ற பக்கங்கள் வெளிவரவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**புரட்சிகர வாழ்த்துக்களுடன்**
**— ஆசிரியர் குழு**

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# அயோத்தி: நாசகார கும்பலின் இலக்கு இந்துமத பாசிச பயங்கரவாத ஆட்சி

அயோத்தி பாபரி மசூதியை இடித்துத் தரைமட்டம் ஆக்கியதோடு நாடுமுழுவதும் மதவெறிப் படுகொலைக் கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டதன் மூலம் தங்கள் நயவஞ்சகச் சதித் திட்டத்தை வெற்றிகரமாகத் துவக்கிவிட்டார்கள், இந்து மத வெறி பார்ப்பன - பனியா பாசிசக் கூட்டத்தினர்.

பாபரி மசூதியை இடித்ததானது, "இந்துமத - வகுப்புவாதத் தீவிரவாதிகளது வெறிச்செயல்", "அநாகரிகமான காட்டுமிராண்டித்தனம்" "வக்கிரமான கோழைத்தனம்" "மத்திய கால மதவெறிக் குரூரம்" "தேசிய அவமானம் - துரோகம்" "மன்னிக்க முடியாத கிரிமினல் குற்றம்" - என்று சித்தரிப்பது எல்லாம் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் நாசகரமான கடப்பாரைச் சேவையை மட்டுமே குறிக்கின்றன.

ஆனால், இந்த இழிசெயல், இந்து மத வெறி பாசிச பயங்கரவாத ஆட்சியை நிறுவுவது என்கிற மிகவும் அபாயகரமான, நயவஞ்சகமான, கொடிய சதித்திட்டத்தைப் பகிரங்கமாக அரங்கேற்றுவதைத் தான் குறிக்கிறது.

பாபரி மசூதியின் கவிகைகளை உடைத்து நொறுக்கி வீழ்த்தியவுடன் இந்து மத "சந்நியாசினிகள்" என்று பட்டஞ்சூட்டிக் கொண்டுள்ள உமா பாரதியும், ரீதம்பராவும் ஒலிபெருக்கி மூலம் அலறினார்கள், "இதோ, இந்து ராஷ்டிரம் பிறக்கிறது!" — இதுதான் அவர்கள் இலட்சியம். இந்து மத வெறி பாசிச பயங்கரவாதம் - இதுதான் அவர்களின் இராம ராஜ்ஜியம்!

இந்து மதவெறியின் குருபீடமாகிய ஆர்.எஸ்.எஸ்ஸோ அதன் கள்ளக் குழந்தைகளான பாரதீய ஜனதா, விசுவ இந்து பரிஷத், சிவசேனா, பஜ்ரங்தள், இந்து முன்னணி முதல் தமிழ்நாடு பிராமணர் சங்கம் வரை அவர்கள் யாருமோ, "இந்து ராஷ்டிரம்"தான் தமது இலட்சியம் என்பதை மறைக்கவில்லை.

பாபரி மசூதியை இடித்து, அந்த இடத்தில் ராமனுக்குக் கோவில் கட்டுவது ஒரு மத நம்பிக்கையை நிறைவேற்றுவது என்பதெல்லாம் பாமர ராம பக்தர்களைத் திரட்டுவதற்காகச் செய்த பிரச்சாரம்தான்! "இசுலாமிய ஆட்சியாளர்கள், ஆக்கிரமிப்பாளர்களால் இந்துக்கோவில்கள் இடிக்கப்பட்டன; இந்துக்கள் இழிவுபடுத்தப்பட்டனர்; இந்துமதத் துறவிகள் கொல்லப்பட்டனர்; இந்த தேசிய அவமானத்தின் சின்னமாக விளங்குவதுதான் பாபரி மசூதி; அதை அகற்றி ராமன் பிறந்த பூமியில் ராமனுக்குக் கோவில் கட்டுவது அன்று நேர்ந்த அவமானங்களுக்குப் பழிவாங்குவது, இந்துக்களின் கௌரவத்தை நிலை நாட்டுவது" என்கிற விளக்கங்கள்கூட இந்துமதவெறி பாசிஸ்டுகள் தமது "இந்து ராஷ்டிரம்" என்கிற அரசியல் பேராசைக்கு மதச் சாயம் பூசுபவைதான்!

"இராமன் ஒரு மதத்தின் கடவுள் மட்டுமல்ல; தேசிய ஒருமைப்பாட்டின் சின்னம் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். போலியான மதச் சார்பின்மை, தேசிய ஒருமைப்பாட்டிற்கு எதிராக இந்துத்துவம், இராம ராஜியம், இந்து ராஷ்டிரம் அடிப்படையிலான தேசியத்தை நிர்மாணிப்பது, எங்கள் நோக்கம்" என்று இந்து மத வெறி பாசிஸ்டுகள் அனைவரும் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர்.

ஆகவே, பாபர் மசூதியை இடித்த சம்பவம் உண்மையில் அரசியல் அதிகார அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையைப் போன்றது. பாரதீய ஜனதா அல்லாத எதிர்க் கட்சிகள் கூறுவதைப்போல ஒட்டுப் பொறுக்கும் தேர்தல் ஆதாயம் மட்டும் அதன் குறிக்கோள் அல்ல. ஆட்சியைப் பிடிப்பதற்குத் தேர்தல்களையும் ஒரு வழியாக இந்துமதவெறி பாசிஸ்டுகள் பயன்படுத்திக் கொள்ளலாம்; ஆனால், நாட்டின் நீதி - நிர்வாக - அரசியல் அமைப்புமுறை எதன்மீதும் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது என்பதை நிரூபித்துவிட்டார்கள். மத வெறி பாசிச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு இரத்த ஆறில் நீந்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் அவர்கள் தெரிந்தெடுத்துக் கொண்டுள்ள வழி. அதன் ஒரு பகுதிதான் அயோத்தியில் அவர்கள் புரிந்த அராஜக வெறியாட்டம்.

இந்து மதவெறி பாசிஸ்டுகளின் அயோத்தி நாசவேலையைத் தொடர்ந்து கட்டவிழ்த்து விட்டுள்ள அராஜக வெறியாட்டத்தில் இப்போதைய, உடனடித் தாக்குதல் இலக்கு என்னவோ இசுலாமிய சமுதாயத்தினர்தான்! ஆனால், நாட்டின் மதச் சார்பற்ற, ஜனநாயக, தேசபக்த சக்திகளுக் கெதிராகத் அவர்கள் தமது தாக்குதலைத் திருப்பிவிடும் நாள் வெகுதொலைவில் இல்லை. இன்றைய சம்பவங்கள் அதற்கான எச்சரிக்கை - முன்னறிவிப்புதான்!

ஜெர்மனியின் ஆரிய - நாஜிக்கள் ஆட்சியைப் பிடிப்பதற்குப் பின்பற்றிய தந்திரங்கள் பலவும் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் நடவடிக்கைகளில் காணமுடிகிறது. தேசிய அவமானத்துக்குப் பழிவாங்குவது; தேசிய கௌரவத்தை நிலைநாட்டுவது; தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பது; நாட்டின் இழிநிலைக்குக் காரணமானவர்கள் என்று ஒரு குறிப்பிட்ட (யூத) சமுதாயத்தினர் மீது பழிபோட்டு அவர்களைக் கொன்று குவிப்பது நாட்டின் வரலாற்றையே திரித்துப் புரட்டி, மத - இன ரீதியில் நாட்டையே பிளவுபடுத்துவது — ஆகிய அதே தந்திரங்களை இந்துமத பாசிஸ்டுகளும் பின்பற்றுகிறார்கள்.

> இந்த இழிசெயல், இந்துமத வெறி பாசிச பயங்கரவாத ஆட்சியை நிறுவுவது என்கிற மிகவும் அபாயகரமான, நயவஞ்சகமான, கொடிய சதித் திட்டத்தைப் பகிரங்கமாக அரங்கேற்றுவதைத் தான் குறிக்கிறது.

இப்போது பாபரி மசூதியை இடித்து ராமன் கோவிலைக் கட்டியதைப்போல காசியில் உள்ள மசூதியை இடித்துக் காசி விசுவநாதன் கோவிலையும், மதுரா மசூதியை இடித்து கிருஷ்ணன் கோவிலையும் கட்டும் திட்டத்தை நிறைவேற்றி அடுத்தடுத்து இசுலாமிய மதத்தினருக்கு ஆத்திர மூட்டுவது; சொல்லப்படும் மதச் சார்பற்ற அரசியல் அமைப்பின் மீது நம்பிக்கை இழந்து இசுலாமிய மதவாத - தீவிரவாத அமைப்புகளில் தஞ்சமடையும்படியும் எதிர்த் தாக்குதல் தொடுக்கும் படியும் இசுலாமியர்களைத் தள்ளுவது; அதற்கு எதிராக இந்துமதவெறியை நியாயப்படுத்துவதுடன் நாட்டின் பெரும்பான்மையினரான இந்துக்களின் ஏகப்பிரதிநிதியாகத் தம்மை முன்னிறுத்தி மதவெறி - வகுப்புவாதக் கலவரங்களை மூட்டி இரத்த ஆறு ஓடச் செய்து பார்ப்பன - பனியா சாதிய ஆதிக்க அடிப்படையிலான இந்து ராஷ்டிரம் அமைப்பது — இதுதான் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் அரசியல் பாதையாக உள்ளது.

முதலாவதாக, இவர்கள் நாட்டின் பெரும்பான்மையினரான இந்துக்களின் பிரதிநிதிகளும் அல்ல; இரண்டாவதாக, தேசிய நலன்கள் எதுவும் இவர்களது குறிக்கோளாக இல்லை.

ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி., வி.எச்.பி., பஜ்ரங்தள், சிவசேனா, இந்து முன்னணி போன்ற இந்த இந்து மதவெறி பாசிச அமைப்புகள் அனைத்திற்கும் தலைமையேற்று வழி நடத்துபவர்கள் பெரும் தரகு அதிகார முதலாளிகளின் குடும்பத்தினர். தொழில் முறை அரசியல்வாதிகளாகவும், சாமியார்களாகவும், முன்னாள் அதிகாரிகளாகவும் உள்ள பார்ப்பன - பனியா சாதியக் கும்பலைச் சேர்ந்தவர்கள். இந்தச் சாதிகளும் அமைப்புகளும் நாட்டின் பெரும்பான்மையான இந்துக்கள் எனச் சொல்லப்படும் பெண்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களை ஒருபோதும் இந்துக்களாகவும் சமமான சமூக - மத உரிமை உடையவர்களாகவும் நடத்தியதே கிடையாது. சதி முதலிய பெண்ணடிமைத்தனமும் பார்ப்பனீய சநா



படிப்பகம்

www.padippakam.com

தன வருணாசிரம - சாதீய தர்மமுமே இந்தக் கும்பலின் கண்ணோட்டமாக உள்ளது.


இந்துராஷ்டிரம் எத்தகையதாக இருக்கும் என்பதை இந்துமத வெறி பாசிஸ்டுகள் இப்போதே நிரூபித்துவிட்டார்கள். பத்திரிக்கையாளர்கள் மீதான தாக்குதலும் நாடு முழுவதும் சிறுபான்மையினர் உயிரோடு எரிப்பதும் சான்றுகளாக விளங்குகின்றன. ஆட்சியாளர்கள் என்ன நினைக்கிறார்களோ அதுதான் உண்மை என்று எழுதவும் பேசவும் முடியும்; அதுதான் இராம ராஜ்ஜியத்தில் கருத்துச் சுதந்திரம். சிறுபான்மையினருக்கு சமூக, மத, பண்பாட்டு உரிமைகள் மட்டுமல்ல, வாழும் உரிமையே மறுக்கப்படும் என்று காட்டிவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல. இந்து மதவெறி பாசிச ஆட்சியை நிறுவி தங்களது ஆதிக்கம், சுரண்டல் நலன்களைத் தக்கவைத்துக் கொள்ள, நீட்டித்துக் கொள்ள தரகு அதிகார முதலாளிகளும் ஏகாதிபத்தியங்களும் பழைய - புதிய நிலப் பிரபுக்களும் ஊட்டி வளர்த்து வருகின்ற நச்சுப் பாம்புகளே இந்த பார்ப்பன - பனியா அமைப்புகள்.

ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை மறு அடகு வைக்கும் நரசிம்மராவ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளால், உழைக்கும் மக்கள் என்றும் இல்லாத அளவு சுரண்டலுக்கும், விலையேற்றத்திற்கும், வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கும் ஆளாகி ஆலையில் சிக்கிய கரும்பாக அவதிப்பட்டு வருகின்றனர். மதவெறியைத் தூண்டி இப்பிரச்சினைகளில் இருந்து மக்களைத் திசை திருப்பி அவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிப் படுகொலை செய்து கொள்ளும் பாதையில் தள்ளிவிடுவது; இதன் மூலம் புதிய பொருளாதாரக் கொள்கையின் ஆதாயங்களை உறுதிப்படுத்திக் கொள்ள ஏகாதிபத்தியங்கள், தரகு அதிகார முதலாளிகள் பழைய - புதிய நிலப்பிரபுக்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பது இதான் இந்த இந்து மதவெறி பாசிஸ்டுகளின் உடனடி நோக்கமாகும்.

இதுவரை தேசவிரோத - பயங்கரவாத - பிரிவினைவாத பீதியூட்டி நியாயமான தேசிய இன, ஜனநாயக உணர்வுடைய சக்திகளை அடக்கி ஒடுக்கும்படி கோரி அரசியல் ஆதாயம் அடைந்து வந்தது இந்த பார்ப்பன - பனியா பாசிச கும்பல். இப்போது இந்த நாட்டின் நீதி - நிர்வாகமம், அரசியல் அமைப்பு, சட்டத்திட்டங்கள், மரபு - நியதிகள் எதையுமே மதியாத தமது வெறிச் செயல்கள் மூலம் இவர்கள் தாம் உண்மையான வன்முறையாளர்கள், பயங்கரவாதிகள், தேசதுரோகிகள், பிரிவினைவாதிகள், சமூக விரோதிகள், தீவிரவாதிகள், வகுப்புவாதிகள் என்று நாட்டுக்குத் தம்மை அடையாளங் காட்டிக் கொண்டு விட்டனர்.

பாபரி மசூதியை இடித்து, நாடெங்கும் மதவெறிப் படுகொலை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் இசுலாமிய மக்களின் மத உணர்வைப் புண்படுத்தி ஆறாத வடுவை ஏற்படுத்தி விட்டார்கள். இந்து - இசுலாமிய மக்களிடையே நிலவி



டிசம். 6 அன்று பாபர் மசூதியை இடிக்கும் இந்துமதவெறி வானரங்கள்; தேசவிரோதிகள், பயங்கரவாதிகள்.

வந்த சகோதரத்துவ உணர்வு - ஒருமைப்பாட்டின் மீது திரிசூலத்தைப் பாய்ச்சி அவநம்பிக்கையையும், பிளவையும் ஏற்படுத்தி விட்டார்கள்.

பாரதீய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சியைப் பிடிக்கும் வரை மசூதியை இடிக்க மாட்டார்கள்; பிரச்சினையை உயிருள்ளதாக இழுத்தடித்து அரசியல் ஆதாயம் அடைய முயலுவார்கள் என்றுதான் நாம் உட்பட அரசியல் நோக்கர்கள் கருதினர். இந்தமுறையும் மசூதியை முற்றாக இடித்து விடக் கூடாது; தடைகளை மீறி மசூதியை இடிக்கும்போது மத்திய போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தும்; கணிசமான கரசேவகர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள்; அவர்களுக்குத் தியாகிப் பட்டங்கட்டி, மீண்டும் அஸ்திகலச ஊர்வலங்கள் நடத்தி அனுதாப அலையைக் கிளப்பி ஆதாயம் அடையலாம் என்பதுதான் ஒரு பிரிவினரது நோக்கம். ஆனால் பா.ஜ.க. ஆளும் நான்கு மாநிலங்களிலும் லஞ்ச ஊழல் பதவிச் சண்டையிலும் கோஷ்டித் தகராறிலும் சிக்கியதால் அதன் 'தூய்மை' வேடம் கலைந்து அம்பலப்பட்டுப் போனது. அதோடு சமரசப் பேச்சு, நீதிமன்ற முடிவு ஆகிய எதையாவது ஏற்கும்படியான நிர்பந்தம் அதிகரித்து வருவதைக் கண்டார்கள். எனவே முந்திக் கொண்டு தமது சதி திட்டத்தை அமுலாக்கி விட்டார்கள்.

ஆதிக்கத்தை, அதிகாரத்தைக் கைப்பற்றவும் காப்பாற்றிக் கொள்ளவும் பஞ்சமா பாதகங்களைச் செய்வதும் குற்றமல்ல என்று இந்த இந்து மத வெறி பாசிஸ்டுகளின் மூதாதையர்களும் ஆசான்களுமான மனுவும், கௌல்டியனும், சாணக்கியனும் போதித்தார்கள். அதையே அவர்களின் சந்ததியினர் இப்போது கடைப்பிடித்துள்ளனர். நாட்டின் சட்டம் ஒழுங்கையும், நீதியையும் வழுவாது கடைப்பிடிப்போம் என்று வாக்களித்து, நாட்டையும் மக்களையும் நம்பவைத்துக் கழுத்தறுத்து விட்டார்கள். வேறெதையும்விட இந்த நம்பிக்கைத் துரோகத்துக்காவது தண்டிக்கப்பட வேண்டிய, இல்லை, இல்லை பழிவாங்கப்பட வேண்டிய கொடிய எதிரிகளாக இவர்களை நாடும் மக்களும் கருத வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# இடிப்பு சதியில் குற்றவாளிகள் யார்? யார்?

**அயோத்தி பிரச்சினை ஆரம்பம் முதல் பார்ப்பன - பனியா தலைமையிலான ஆர்.எஸ்.எஸ்., காங்கிரசு அமைப்புகளின் கூட்டுச் சதியாகத்தான் கிளப்பப்பட்டு வந்தது.**

பாபரி மசூதியை இடித்துத் தகர்த்த நாசகாரச் செயலுக்காக இந்துமத வெறி பாசிஸ்டுகள் கொஞ்சமும் வெட்கமோ, அவமானமோ, வருத்தமோ, மன்னிப்புக் கோரும் நிலையிலோ இல்லை. மாறாக குதூகலமும் கும்மாலமும் தான் அவர்களிடம் தெரிகிறது. பால்தாக்கரே, வினய் கத்தியார், அசோக் சிங்கால் போன்ற அதிதீவிர இந்து மதவெறி பாசிஸ்டுகள் பகிரங்கமாகவே பெருமையடித்துக் கொள்கிறார்கள். ஆனால் பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். தலைவர்களே அரசியல் உள்நோக்கத்தோடு அயோத்தி வெறிச் செயலை நியாயப்படுத்துகிறார்கள்.

மசூதியை இடித்தது யாரும் எதிர்பாராத, தற்செயலான, துரதிருஷ்டவசமான, கரசேவகர்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பின் விளைவாக நிகழ்ந்துவிட்டது என்று சமாதானம் கூறுகிறார்கள். ஆனால் இது நன்கு திட்டமிட்டு நிறைவேற்றப்பட்ட சதிச் செயல் என்று நிரூபிப்பதற்கான ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. பல்வேறு இந்து மத வெறி பாசிச அமைப்புகளில் யார் மசூதியை இடித்துப் பெருமையைத் தட்டிக் கொண்டு செல்வது என்கிற பங்காளிப் போட்டிதான் நிலவியது. மற்றபடி அயோத்திப் பிரச்சினையே ஆரம்பம் முதல் பார்ப்பன - பனியா தலைமையிலான ஆர்.எஸ்.எஸ். காங்கிரசு அமைப்புகளின் கூட்டுச் சதியாகத்தான் கிளப்பப்பட்டு வந்தது.

1949-ல் அன்றைய மத்திய போலீசு மந்திரி வல்லபாய் பட்டேல், நேருவின் உடந்தையோடு பாபர் மசூதிக்குள் கள்ளத்தனமாக, இரவோடு இரவாக ராமன்-சீதை சிலைகள் வைக்கப்பட்டது. அது ''தானே தோன்றிய மகிமை'' என்பதாகப் புளுகினர். பார்ப்பன அதிகாரிகள், நீதிபதிகளை வைத்து அச்சிலைகளை அகற்றக் கூடாது என்று உத்திரவு வாங்கி பாபரி மசூதியைப் பூட்டிப் போடும்படி செய்தார்கள். அது வரை அந்த மசூதியில் தொழுகை நடந்து வந்தது. இப்போது 40 ஆண்டுகளுக்கு மேல் தொழுகையே நடக்காத அந்தக் கட்டிடம் மசூதியே அல்ல என்று வாதிடுகிறார்கள்.

1985-ல் அலகாபாத் நீதிமன்ற பார்ப்பன நீதிபதியையும், பாசிச ராஜீவையும் வைத்து உத்திரவு வாங்கி அந்த ராமன். சீதை சிலைகளுக்கு வழிபாடு நடத்துவதற்காக மசூதியைத் திறந்து விட்டார்கள். அப்போதிருந்து பாபரி மசூதியை இடித்து ராமன் கோவில் கட்டும் இயக்கத்தைத் தீவிரப்படுத்தினார்கள். ஆனால் மசூதியை இடிப்பது தங்கள் நோக்கமல்ல; அதை அப்படியே பெயர்த்து எடுத்து வேறு இடத்தில் வைப்போம் என்றே புளுகி வந்தார்கள். அதே சமயம் ரதயாத்திரைகள், செங்கல் பூசைகள், ராமன் ஜோதி யாத்திரைகள் போன்றவற்றை நடத்தி நாடு முழுவதும் மத வெறி நஞ்சு விதைத்தனர்; கடப்பாரை சேவைக்கென்றே கரசேவகர்கள் என்கிற பெயரில் குண்டர்படை திரட்டினர்; கோடி கோடியாக நிதியும் திரட்டினர்.

இதற்கிடையே பாபரி மசூதிமீது இந்து மத வெறியர்கள் உரிமை கொண்டாடுவதை எதிர்த்து அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் இசுலாமியர்கள் தொடுத்த வழக்கு தொடருகிறது. பாபரி மசூதி இருக்கும் இடத்தில்தான் ராமன் பிறந்ததற்கும், அங்கே ராமனுக்குக் கோவில் இருந்து, இடிக்கப்பட்டு பாபரி மசூதி கட்டப்பட்டதற்கும் எவ்வித வரலாற்று, அகழ்வாய்வு ஆதாரங்கள் கிடையாது என்று ஆராய்ச்சியாளர்களின் முடிவுகள் வெளிவந்தன. இதற்கெல்லாம் வரலாற்று, அகழ்வாய்வு ஆதாரங்கள் தேவை இல்லை; இது இந்த மதத்தினரது மத நம்பிகைதான் என்று பித்தலாட்டம் செய்தனர். அரசியல் சட்டத்துக்குப்பட்டு தீர்வுகாண வேண்டும் என்று பஞ்சாப், காஷ்மீர் பிரச்சனைகளுக்குச் சொல்லும் இந்த இந்துமத வெறி பாசிஸ்டுகள், அயோத்தி விவகாரத்தில் மட்டும் நீதிமன்றத் தீர்வுக்குக் கட்டுப்படத் தேவையில்லை என வம்படியாகப் பேசினர். பிறகு சில பார்ப்பன வரலாற்று, அகழ்வாய்வு ஆராய்ச்சியாளர்களை வைத்து கண்டுபிடிப்புகள், ஆதாரங்களை உருவாக்கினர்; அவையும் போலியானவை என்று நிரூபிக்கப்படவே சட்ட விரோத, அராஜக, அதிரடி கிரிமினல் நடவடிக்கைகளில் இறங்கினர்.

பாபரிமசூதி உள்ள இடத்தில் ராமன் கோவில் கட்டுவதற்கான வரைபடம் தயாரித்தனர்; கட்டுமானப் பணிகளுக்கான பொருட்களைக் குவித்தனர். மசூதிக்கு முன்பாகவே கால்கோல் விழா (ஷிலன்யா) பூசை நடத்தி ஒரு கூடாரமும் போட்டு, ராமன் படமும் வைத்தார்கள். இதற்கெல்லாம் பாசிச ராஜீவ் அரசு உடந்தையாக இருந்தது. ராமன் கோவில் விவகாரத்தை வைத்து ஆதரவு பெருகுவதைக் கண்ட ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. கும்பல் உடனேயே கரசேவை என்கிற பெயரில் கட்டுமானப் பணியைத் துவங்கி நடத்த திட்டமிட்டனர்; அதற்காக நாடுமுழுவதும் மதவெறி தீயை மூட்டும் நோக்கத்தோடு சோமநாதபுரத்தில் இருந்து அயோத்திக்கு ரதயாத்திரையில் புறப்பட்டார் அத்துவானி. தேசிய முன்னணி - ஜனதாதள அரசு அதைத் தடுத்து அத்துவானியைக் கைது செய்த போதும், அயோத்தியில் திரண்ட கரசேவை குண்டர்கள் போலீசுதடையை மீறி பாபரி மசூதிக்கு ஓரளவு சேதம் விளைவித்தனர். இதையே ஆதாரமாக வைத்து தேர்தல் அறுவடை செய்து மத்தியில் 120 எம்.பி. சீட்டுக்களையும் உ.பி. மாநில ஆட்சியையும் இந்து வெறியர்கள் பிடித்தார்கள்.

உ.பி. மாநில ஆட்சி அதிகாரத்தைப் பயன் படுத்திக் கொண்டு பாபரி மசூதியைச் சுற்றியுள்ள 2.77 ஏக்கர் நிலத்தைக் கையகப் படுத்தி அங்கிருந்த சிறு கோவில்கள், மடங்களை இடித்துத் தள்ளினர். உயர் நீதிமன்றத் தடையை மீறி ராமன் கோவிலுக்கான அத்திவாரக் கட்டுமான பணிகளைக் கடந்த ஜூலை மாதம் துவங்கினர். பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதாக நரசிம்ம ராவ் அரசு அளித்த வாக்குறுதியை ஏற்பதாகக் கூறி கட்டுமானப் பணியை ஒத்தி வைத்தனர்; ஆனால் அதையும் முறித்துக் கொண்டு, நீதிமன்றத் தடையையும் மீறி டிசம்பர் 6-ந் தேதி கரசேவை துவங்கப்போவதாக ஒரு தரப்பாக அறிவித்தனர்.

உ.பி. மாநில பாரதீய ஜனதா அரசை ஆட்சி நீக்கம் செய்யும்படி. பிற கட்சிகள் கோரின. அதோடு உச்ச நீதிமன்றத்தில் தடை உத்திரவு மீறல் - நீதிமன்ற அவமதிப்ப வழக்குகளை அது எதிர் கொண்டது. இந்த இரண்டில் இருந்தும் தப்பிப்பதற்காக ''இனி நீதிமன்ற உத்திரவை மீற மாட்டோம்; சட்டத்தையும் நீதியையும் மதிப்போம்'' என்று உச்ச நீதிமன்றத்துக்கும், மத்திய அரசுக்கும் வாக்களித்தது. ஆனால் பாபரி மசூதியை இடிப்பதற்கான சதியிலும் தயாரிப்பிலும் இந்து மத வெறி பாசிஸ்டுகள் தீவிரமாக இறங்கினர்.

அயோத்தியில் பூசையும், பஜனையும் உள்ள ''அடையாள கரசேவை'' மட்டுமே நடக்கும், நீதிமன்ற உத்திரவை மீறமாட்டோம் என்று மதவெறித் தலைவர்கள் வாக்களித்ததால் கரசேவையினர் திரள்வது குறைந்தது. எனவே இதற்கு முரண்பாடாக உத்திரவை மீறி, கரசேவை நடத்துவோம் என்றும் வெறிக்கூச்சல் போட்டனர். விசுவ இந்து பரிஷத் பொதுச் செயலாளர் அசோக் சிங்கால், பஜ்ராங்தள் தலைவர் வினய் கத்தியார் மட்டுமல்ல பா.ஜ.க.வின் அத்துவானியும் ஆர்.எஸ்.எஸ். பொதுச் செயலாளர் சேஷாத்திரியும் பகிரங்கமாகவே இதை அறிவித்தனர்.

''வெறும் பூசையும் பஜனையும் மட்டும் நடக்காது; ஷவல்களும் செங்கற்களும் கொண்டு கரசேவை நடக்கும்'' என்று அத்துவானி ஆவேசத்துடன் கூறினார். ''சாது சமாஜம் சட்டத்துக்கு மேலானது. சாதுக்களும் துறவிகளும் சந்நியாசம் பூண்டவர்கள்; அவர்கள் சட்டத்தை எற்றுக் கொண்டவர்கள் அல்ல. டிசம்பர் 4-ந் தேதி கூடும் மார்க்க தர்ஷக் மண்டல் என்ற சாதுக்களின்,



படிப்பகம்

www.padippakam.com

மதத்தலைவர்களின் பஞ்சாயத்துதான் இறுதி முடிவு செய்யும்'' என்று ஆர்.எஸ்.எஸ்ஸின் சேஷாத்திரி அறிவித்தார்.


கரசேவைக்கு ஆள் திரளாதது கண்டு அத்துவாணி, ஜோஷி, சேஷாத்திரி ஆகிய பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் உத்திரப் பிரதேசம் முழுவதும் இறுதி நாட்களில் ஒரு ''மினி'' ரத யாத்திரை நடத்தி மதவெறியூட்டி ஆள் திரட்டினர். கர சேவை குண்டர்களில் ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து மசூதியை இடித்து நிரவுவதற்காகவும் மத்தியப் படை வந்தால் எதிர்த் தாக்குதல் தொடுக்கவும் முன்னாள் இராணுவத்தினரை வைத்து ''கொரில்லா'' பயிற்சியளித்தனர்.

யாரோ தமது எதிரிகள் கரசேவகர்கள் என்கிற பெயரில் ஊடுருவி மசூதியை இடித்துவிட்டதாக ஆரம்பத்தில் புளுகினர்; ஆனால் அயோத்திக்கு வந்த கரசேவகர்களுக்கு முன் கூட்டியே அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு சோதிக்கப் பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். மேலும் மத்திய படை வந்தால் எதிர்த்துத் தாக்குவதற்காகத் தற்கொலைப் படையும் பயிற்சியும் ஆயுதங்களும் கூட ஏற்பாடு செய்திருந்தனர்.

கரசேவை எதிர்ப்புப் பேரணிகள் இந்து மத வெறி குண்டர்களால் தாக்கப்பட்டன அல்லது உ.பி. அரசினால் தடுத்து விரட்டப்பட்டன. உச்ச நீதிமன்றத்துக்கு அளித்த வாக்குறுதியையும், மாநில அதிகாரத்தையும் காட்டி மத்தியப்படை அனுப்பப் படுவதைத் தடுத்தனர். இறுதி நேரத்தில் கூடுதலான படை அனுப்பும்படி கோரிப் பெற்று தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு ஏமாற்றினர்.

டிசம்பர் ஆறாம் தேதி காலை சராயு நதியில் குளித்துவிட்டு இந்து மத வெறி பாசிசத் தலைவர் அனைவரும் பாபரி மசூதியின் முன்பு திரண்டு பூசையும் பஜனைகளும் தொடங்குவதாக நாடகமாடினர். ஆனால் முன் கூட்டியே திட்டமிட்டபடி கர சேவகர்களை மூன்று பிரிவாக பிரித்து ஒரு பிரிவினர் மசூதி மீதேறி இடித்தனர்; மற்றொரு பிரிவு போலீசு படை வந்தால் மோதவும், வழி மறிக்கவும் தயாராக இருந்தனர். இன்னொரு பிரிவினர் பத்திரிக்கையாளர்கள், புகைப்பட வீடியோ காமிராக்காரர்களைப் பிடித்துத் தாக்கினர்; பெண் பத்திரிக்கையாளர்களின் சேலையை உருவி அவமானப்படுத்தினர். தமது வெறிச் செயலுக்கு ஆதாரம் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்தனர்.

இதெல்லாம் தமது கட்டுப்பாட்டை மீறி நடந்தவை; தடுப்பதற்கு ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களும், பி.ஜே.பி. தலைவர்களும் முயன்றும் முடியாமல் போனதால் நிகழ்ந்தவை என இப்போது புளுகுகின்றனர். ஆனால் இதற்கெல்லாம் முதல் நாளே ஒத்திகை பார்க்கப்பட்டன. பாபரி மசூதியை இடிப்பதையும், அந்த இடத்தில் திடீர் ராமன் கோவில் கட்டுவதையும் தலைவர்கள் நேரில் கண்டு களித்தனர்; உமாபாரதியும் ரிதம்பராவும் சிங்காலும் கரசேவகர்களுக்கு வெறியேற்றினர். அயோத்திக்குள் வராமல் மத்தியப்படைகளைத் தடுக்க சாலைத் தடைகளைப் போடும்படி வழிகாட்டினார், அத்துவானி. எல்லாம் 5 மணி நேரத்துக்குள் நடந்து முடிந்தன. இதே எவ்வளவு திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டன என்பதை விளக்கிவிடும்.



மசூதியை இடித்து நிரவுவதற்காக பயிற்சியெடுக்கும் கரசேவை குண்டர்களில் ஒரு பகுதியினர்; திட்டமிட்ட சதிக்கு ஆதாரம்!

அயோத்தி - பைசாபாத் இரட்டை நகரத்தில் பாபரி மசூதி மட்டும் இடிக்கப்படவில்லை. அங்குள்ள இசுலாமியர் வீடுகள், கடைகள் பிற சிறிய மசூதிகள் ஆகிய அனைத்தும் இடித்துத் தள்ளி நாசமாக்கப்பட்டன. இசுலாமியர் அனைவரும் முன் கூட்டியே வெளியேறியதால் தப்பிப் பிழைத்தனர். மசூதி இடிப்பு அயோத்தியில் மட்டும் நடைபெறவில்லை; நாட்டின் பல பகுதிகளிலும் நடந்துள்ளன. ஆம்பூர் - வாணியம்பாடி பகுதியில் இசுலாமியர்களுக்குச் சொந்தமான தோல் தொழிற்சாலைகள், நெல்லையில் பீடித் தொழிற்சாலைகள் கூட தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஆகவே இதிலிருந்து இந்து மதவெறி பாசிஸ்டுகளின் நோக்கமும் புரிகிறதல்லவா?

**போலீசு - அதிகார வர்க்கம் அடங்கிய நிர்வாக அமைப்பின், உயர் - உச்ச நீதிமன்ற அமைப்பின் ஒத்துழைப்பின்றி இந்துமதவெறி பாசிஸ்டுகள் தமது சதிச் செயலை நிறைவேற்றி இருக்க முடியாது.**

ஆனால், ''இதெல்லாம் இந்துக்களின் அடக்கி வைக்கப்பட்டிருந்த உணர்ச்சிக் கொந்தளிப்பின் விளைவு. மதச் சிறுபான்மையினருக்குப் பிற கட்சிகள் இவ்வளவு நாளும் பல சலுகைகள் காட்டி, பெரும்பான்மையினரான இந்துக்களின் உணர்வுகளை மதியாது. உரிமைகளை மறுத்து வந்த தன் விளைவு'' என்று இந்து மதவெறி பாசிஸ்டுகள் சாதிக்கின்றனர். ஆனால், இது இந்து மதப் பெரும்பான்மையினரின் பெயரால் இந்து மத வெறி பாசிஸ்டுகள் திட்டமமிட்டு நடத்தும் சதிதான் என்பது தெளிவாகவே தெரிகிறது.

போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட நாட்டின் சட்டபூர்வமான அரசியல் கட்சிகள், வானொலி, வானொளி, பத்திரிகைகள் ஆகிய அனைத்துமே மூடிமறைக்கும் ஒரு முக்கிய உண்மையை இங்கே சொல்லியாக வேண்டும். ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் கள்ளக் குழந்தைகளான வகுப்புவாத - அரசியல் நோக்கமுடைய அமைப்புகள் மட்டும்தான் அயோத்தி வெறிச் செயல்களுக்குக் காரணமானவை என்று அவை சித்தரிக்கின்றன. இந்துமதக் கஞ்சா சாமியார்கள், சாதுக்கள், துறவிகள், மடாதிபதிகள், ஆதீனங்கள், பீடாதிபதிகள் ஆகியவர்களுக்கு இதில் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்பதைப்போல கருத்துப் பரப்புகிறார்கள். ஆனால், இந்த மதவாதிகள்தான் எல்லா வெறிச் செயல்களையும் முன்னின்று தூண்டிவிட்டவர்கள், வழிநடத்தியவர்கள்.

இந்துமதக் காரியங்களை வழிநடத்துவதற்கு என்று 180-க்கும் மேற்பட்ட சாமியார்கள், சாதுக்கள், துறவிகள், மடாதிபதிகள், பீடாதிபதிகள் ஆதீனங்கள் அடங்கிய இந்துமத உயர்மட்டக் குழுவாக மார்க்க தர்ஷக் மண்டல் அமைக்கப்பட்டுள்ளது. அதன் கிளைகளாக ராமன் கோயில் கட்டுவ

படிப்பகம்

www.padippakam.com

தற்கான அறக்கட்டளை, கட்டுமானக் குழு, நிதிக்குழு, பூசை - பஜனைகளை நடத்தும் குழு போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு மூலமாகத்தான் அரசுடன் முறைப்படியான பேரங்களை இந்து மத வெறி பாசிஸ்டுகள் நடத்துகின்றனர். கரசேவைக்கு நாள்குறிப்பது, வழி நடத்துவது, தள்ளிவைப்பது, மசூதியை இடிப்பது போன்ற சகல பணிகளையும் இந்த மதவாதிகளை முன்னிறுத்தியே நடத்தப்படுகின்றது.

கரசேவகர்களுக்கு வெறியேற்றி, அயோத்தி வெறிச்செயல்களை முன்னின்று நடத்திய இவர்களது அமைப்புகள் தடை செய்யப்படவும் இல்லை. இந்த கிரிமினல் குற்றவாளிகள் கைது செய்யப்படவும் இல்லை. இவர்களுக்கு எதிராக முனுமுனுப்பது கூட இந்துமத உணர்வைப் புண்படுத்தி விடும் என்பதற்காகவே அயோத்தி சதிச்



மசூதியை இடிக்க, தடுப்பைத் தாண்டி பாயும் கரசேவா குண்டனுக்கு கைகொடுத்து உதவி செய்யும் துணை ராணுவப்படை

செயலில் இவர்களது பங்கு மறைக்கப்படுகிறது; உண்மையில் இவர்கள் மீது துரும்புகூடப் படக்கூடாது என்பதாகச் சொல்லியே கரசேவர்கள் மீது எந்தவித போலீசு நடவடிக்கையும் எடுப்பதற்கு ஆட்சியாளர்கள் மறுத்துவிட்டார்கள்.

ஆர்.எஸ்.எஸ்ஸும் அதன் தொங்கு சதை அமைப்புகளும் மத ஆச்சாரியார்களும் அடங்கிய இந்து மதவெறி பாசிஸ்டுகள் கரசேவைக்கு வித்திட்டவர்கள், கலந்து கொண்டவர்கள் தேசதுரோக, கிரிமினல் குற்றவாளிகள் என்றால் அவர்களின் சதிச் செயல்கள் நிறைவேறுவதற்குத் துணை நின்ற அ.தி.மு.க. மற்றும் காங்கிரசும்கூட அதற்கு முழுப்பொறுப்பானவர்கள்தாம். இந்த மூன்று பிரிவினரும் பார்ப்பன - பனியா ஆதிக்கவாதிகளின் பிரதிநிதிகள் என்கிற முறையில் இந்து மதவெறியின் திரிசூலமாக இருந்து நாட்டைத் துண்டாடும் சதிச் செயலில் பங்கு கொண்டார்கள். அது மட்டுமல்ல போலீசு - அதிகார வர்க்கம் அடங்கிய நிர்வாக அமைப்பும் உயர் - உச்ச நீதி மன்ற அமைப்பும்கூட இந்த மதவெறிச் சதிச் செயலுக்குத் துணைபோயின. இவர்கள் அனைவரின் ஒத்துழைப்பின்றி இந்துமதவெறி பாசிஸ்டுகள் தமது சதிச் செயலை நிறைவேற்றி இருக்க முடியாது.

உ.பி.யின் பி.ஜே.பி. அரசு கையகப்படுத்திய இடத்தில் தடை உத்திரவை மீறி கட்டுமானப் பணி நடத்தியது. இந்த நீதி மன்ற அவமதிப்பு வழக்கில் கடும் நடவடிக்கை எடுக்க மறுத்து தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தது, உச்சநீதி மன்றம். மீண்டும் கரசேவை தொடங்குவதாக இந்துமத வெறி பாசிஸ்டுகள் நாள்குறித்த பிறகும் நடவடிக்கை எடுக்கவில்லை. அயோத்தியின் அந்தப் பகுதி முழுவதையும் பொறுப்பேற்றுப் பாதுகாக்கும் ''ரிசீவராக'' மத்திய அரசை நியமிக்குமாறு இசுலாமிய மனுதாரர் கோரியதை தடலடியாக நிராகரித்தது. ''கையகப்படுத்தப்பட்ட இடத்தில் கட்டுமானப்பணி நடக்காது; அடையாள கரசேவை தான் நடக்கும்'' என்று உ.பி.யின் பி.ஜே.பி. அரசு கொடுத்த வாக்குறுதியை அப்படியே நம்பி, ஏற்று அதைமேற்பார்வையிடுவதற்கான ஒரு மாவட்ட நீதிபதியை நியமித்தது. இந்து மதவெறி பாசிஸ்டுகளின் முரண்பட்ட பேச்சுகளையும், லட்சக்கணக்கில் கரசேவர்கள் குவிவதையும் சுட்டிக்காட்டி ஒரு ''ரிசீவரை'' நியமிக்கும்படி திரும்பத் திரும்பக் கோரியும் அதற்கு உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது. ''பத்திரிக்கைச் செய்திகளை நம்பமுடியாது'' என்று கூறி இந்துமத வெறி பாசிஸ்டுகளுக்கு வக்காலத்து வாங்கியது. அவர்களின் சதித் திட்டங்கள் குறித்து உளவுத் துறையின் தகவல்கள் தரப்பட்டும் உச்ச நீதி மன்றம் தக்க நடவடிக்கை எடுக்க மறுத்தது.

''எந்த நேரத்திலும், நள்ளிரவிலும் நீதி மன்ற அமர்வு நடக்கும், நடவடிக்கை எடுப்போம்; கண்காணிப்பு நீதிபதி எங்களுக்குத் தகவல் அனுப்ப சகல துரித வசதிகளும் ஏற்பாடு செய்துள்ளோம்'' என்று உச்சநீதி மன்றம் கூறியது. ஆனால் கண்காணிப்பு நீதிபதியோ முதல்நாள் இரவு வரை கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை எனப் பொய் செய்தி அனுப்பியுள்ளார். மசூதி முற்றாக இடிக்கப்பட்டு திடீரென ராமன் கோவில் கட்டப்பட்ட சாவகாசமாகச் செய்தி அனுப்பினார். நள்ளிரவில் ஒரு நீதிபதியின் வீட்டில் விசாரணை நடத்திய மன்றமோ நடந்த சம்பவத்துக்காக வருத்தம் தெரிவித்ததோடு கலைந்தது. குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவும், மசூதியை மீண்டும் கட்டவும் கோரியதைகூட ஏற்கவில்லை.

உ.பி. மாநில போலீசு, அதிகாரிகளோ,'இந்துமத வெறியர்கள் தமது சதிச் செயலை நிறைவேற்றுவதற்கு களத்தில் நின்று உடந்தையாக இருந்தனர். கரசேவகர்களில் ஒருவராக நடித்தது தங்கி இருந்த ''ஸ்டேட்ஸ்மேன்'' நிருபர் சஞ்சய் கௌ, ''பிரதேச ஆயுதப் படையினருக்கும் கரசேவகர்களுக்கும் இடையிலான உறவு பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். அமைப்பினருக்கிடையில் இருப்பதைப்போல தோழமையானதாக இருக்கிறது'' என்று எழுதினர். கரசேவை குண்டர் படையினர் தம்மீது கற்களை விட்டெறிந்து முற்றுகையையும், தடுப்புகளையும் உடைத்துக் கொண்டு மசூதி மீதேறி கடப்பாரை கொத்தளங்களால் அதன் கவிகைகளை உடைத்தபோது இளித்துக் கொண்டு அந்த வளாகத்தை விட்டு உ.பி. ஆயுதப் படையினர் விலகிச் சென்றனர். அவர்களில் கணிசமான பேர் ''ஜெய் ஸ்ரீராம்'' என்று கூவிக் கொண்டு பஜனையிலும் கரசேவையிலும் கலந்து கொண்டனர்.

மாநிலப் படையினர்தான் இப்படி என்றில்லை. கரசேவகர்களை வெளியேற்றுவதற்காகப் போன மத்தியத் துணை இராணுவத்தினர், தாமே கல்லடிகளை வாங்கிக் கொண்டு பாதுகாப்பாக குண்டர் படையை அழைத்துப் போய் வெளியூர்களுக்கு அனுப்பி வைத்தனர். பாபரி மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டுள்ள திடீர் ராமன் கோவிலுக்குப் போய் பக்தி சிரத்தையோடு கும்பிடு போட்டனர். வெளியார் யாரையும் அனுமதிக்காத நிலையில் தாமே ஒரே நாளில் 9,000 ரூபாய் ''ராமன் கோவில்'' உண்டியலில் போட்டு காணிக்கை செலுத்தினர். பிற மநிலங்களிலும் இதே நிலைதான். இந்து மதவெறி பாசிஸ்டுகள் தடை செய்யப்பட்ட பிறகு அவர்களைக் கைது செய்வதற்குப் பதிலாக தலைவர்களைச் சந்தித்து ''அசௌகரியங்கள் ஏதாவது உண்டா'' எனக் குசலம் விசாரித்து ''சல்யூட்டு'' அடித்துவிட்டு திரும்பினர்.

மசூதி இடிப்பைத் தொடர்ந்து நடந்த கலவரங்களில் மதவாதிகளுக்கிடையிலான படுகொலைகளைவிட அதிகமான மக்களைப் போலீசாரே சுட்டுக்கொன்று பீதியூட்டினர். பல மாநிலங்களிலும் போலீசு, துணை இராணுவத்தின் அக்கிரமங்கள் பற்


படிப்பகம்

www.padippakam.com

றிய புகார்களும் விசாரணைக் கமிசன்களும் வந்துள்ளன. இவற்றின் இந்து மதவெறிப் போக்குகளைக் களைவதற்குத் தகுந்த களையெடுப்பும் பயிற்சியும் தேவை என்று மத்திய போலீசு மந்திரியே ஒப்புக் கொண்டுள்ளார். 'கலவர'த்தை ஒடுக்குவதற்கு அனுப்பப்பட்ட இராணுவம்கூட தாமதித்தே செயலில் இறங்கியது என்கிறது அசாம் அரசு. அசாமில் நல்காங், குஜராத்தில் சூரத், மராட்டியத்தில் பம்பாய் - தராவி ஆகிய இடங்களில் இசுலாமியர் உயிரோடு கொளுத்தப்பட்டதை போலீசும், துணை ராணுவமும், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.

அயோத்தி பாபரி மசூதியையும் சட்டம் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக பொறுப்பேற்றிருந்த மாவட்ட ஆட்சியாளர் மற்றும் உயர் போலீசு அதிகாரிகள் உயரமான கட்டுப்பாட்டு அறையின் கண்ணாடிக் கூண்டுக்குள் உட்கார்ந்து தேநீர் உறிஞ்சிக் கொண்டே மசூதி இடிப்புச் சதிச் செயலைக் கண்டு ரசித்தனர் பத்திரிகையாளர்கள் தலையிட்டு அவர்களிடம் கேள்வி கேட்ட போது, ''உங்களுக்குப் பதிலளிக்க வேண்டியதில்லை, வெளியேறுங்கள்'' என்று சொல்லி விரட்டினார்கள், அதிகாரிகள்.

''நிலைமை மோசமாகிவிட்டது, மேலும் படை அனுப்புங்கள்'' என்று கோரிய மாவட்ட ஆட்சியாளர், படைகள் வரும் வழியிலேயே மறித்துத் திருப்பி அனுப்பிவிட்டார். மத்திய அரசின் கட்டளையை ஏற்றுப் புறப்பட்டுப்போன மத்திய ரிசர்வ் போலீசு படையையும் வழிமறித்து அவர் திருப்பி அனுப்பினார். பிரச்சினையைத் தாமே சமாளித்துக் கடும் நடவடிக்கை எடுத்து வருவதாகக் காட்டுவதற்கே மேலும், மேலும் படைகளைக் கோரியும் அப்படைகளைச் செயல்படவிடாமல் முடக்கி வைத்தனர்.

சாதுக்கள், கரசேவகர்கள் மீது பலாத்கார நடவடிக்கை எதுவும் எடுக்கக்கூடாது என்று உ.பி. முதல்வர் உத்திரவிட்டிருந்ததால்தான் அவ்வாறு செய்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர்; உ.பி. முதல்வரும் அதிகாரிகள் மீது தவறு இல்லை; தானே முழுப் பொறுப்பு என்று கூறியுள்ளார். உண்மை என்னவென்றால் அரசுச் செயலாளர்கள், மாநில போலீசு டி.ஜி.பி முதல் மாவட்ட ஆட்சியாளர் வரை அனைவரும் பார்ப்பன அதிகாரிகள்; இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு விசுவாசிகள்.

மசூதியை இடித்து ராமன் கோவில் கட்டுவது என்ற நாசகாரச் சதிச் செயலுக்கு காங்கிரசு முழு ஒத்துழைப்புக் கொடுத்துள்ளது. மசூதியை இடித்ததன் மூலம் இந்துமத - வகுப்புவாத அமைப்புகள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டன என்று நரசிம்மராவ் இப்போது அலறுகிறார். ஆனால், அவர்களது சதிச் செயலை நன்கு அறிந்தும் நம்பிக்கை வைக்கும்படி நாட்டையும் மக்களையும் ஏமாற்றி துரோகம் செய்தது சகுனி நரசிம்மராவ் அரசு.

பி.ஜே.பி., வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ், தலைவர்கள் நீதிமன்ற உத்திரவை மீற மாட்டோம் என்று மீண்டும் மீண்டும் வாக்களித்தனர்; உச்சநீதி மன்றத்திடம் அதற்கான உறுதி மனு அளித்தனர். அதனால்தான் அசம்பாவிதம் நடக்காது என்று நம்பினோம் என்கிறது மத்திய அரசு. குற்றம் எதுவும் செய்யாதபோது அரசியல் நிர்ணயச் சட்டப்படி மாநில அரசை நீக்கமுடியாது; மேலும் சட்டம் ஒழுங்கு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் வருவது; அதில் குறுக்கிட முடியாது; எனவேதான் மசூதி இடிப்பதைத் தடுக்கவில்லை என்கிறார்.

இதுவரை பல மாநில அரசுகளை 356-வது விதியைப் பயன்படுத்தி மத்திய அரசு கலைத்துள்ளது; அப்போதெல்லாம் இந்த அளவுகோலை வைத்துப் பார்த்ததா? ''கட்சி மாறுவதும் உறுதியற்ற அரசியல் நிலைமையும் ஏற்பட்டுவிடும்; மாநில ஆளுங்கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுவிட்டது; பிரிவினைவாத அபாயம் உள்ளது'' என்று கூறி தக்க அடிப்படை இன்றியே எவ்வளவு மாநில அரசுகள் கலைக்கப்பட்டிருக்கின்றன?

இருப்பினும் ''டிச.6-ந் தேதி கரசேவை நடந்தே தீரும்; நீதிமன்ற உத்திரவை மீறியே தீருவோம்'' என்று இந்து மதவெறி பாசிஸ்டுகளும் சாதுக்கள் - சாமியார்கள் திமிரோடு சவால்விட்ட பின்னும்; மசூதியை இடித்து ராமன் கோவில் கட்டுவதற்கான சதித் திட்டம், பயிற்சி, ஆள் திரட்டுவது குறித்து மத்திய உளவுப் படையின் இரகசிய அறிக்கை 15 நாட்களுக்கு முன்பே வந்த பிறகும், உ.பி மாநில பி.ஜே.பி. அரசைக் கலைக்கும்படி பலமுறை பிற எதிர்க் கட்சிகள் கோரியும் அதைச் செய்ய மறுத்துவிட்டது. கரசேவை நடப்பதற்கு மூன்று நாட்கள் முன்பாக தேசியப் பாதுகாப்புப் படை (NSG) என்னும் அதிரடிப்படை அயோத்தியில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது.

டிசம்பர் 5-ந் தேதி நள்ளிரவு வரை பி.ஜே.பி. - ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுடன் நரசிம்மராவ் இரகசிய பேரங்கள் நடத்தி வந்தார். ராஜஸ்தான் முதல்வர் செக்கேவாத், ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் ராஜேந்திரசிங், சேஷாத்திரி இதில் முக்கியப் பங்காற்றினர். அந்த பேரங்கள் முறிந்து போன போதுகூட மசூதி இடிப்புச் சதிச் செயல் மத்திய அரசுக்குப் புரியாமல் போயிருக்க வாய்ப்பில்லை.

''எந்தச் சூழ்நிலைக்கும் தயாராக உள்ளோம்; எப்படியும் மசூதியைக் காப்போம்'' என்று மக்களுக்கும், உச்ச நீதிமன்றத்துக்கும் மத்திய அரசு வாக்களித்தது. அதைச் செய்யத் தவறியது இன்னொரு நம்பிக்கைத் துரோகம் இல்லையா? சொன்னவாறு இராணுவத்தையும், மத்திய போலீசையும் மசூதியைச் சுற்றி நிறுத்தித் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டாமா? அப்படிச் செய்யாத அதே சமயம் கரசேவைக் குண்டர்கள் மசூதியை இடிப்பதற்குத் தேவையான ஆயுதங்களுடன் நுழைவதற்கு அனுமதித்தது.



கல்கத்தா - தாங்கரா பகுதி; அயோத்தி நாசவேலையைத் தொடர்ந்து நடந்த கலவரத்தில் தாக்கப்பட்டு வீடிழந்து தவிக்கும் முஸ்லீம் குடும்பம்.

நாசவேலை துவங்கி நடப்பதாகச் செய்திகள் கிடைத்தவுடன் உ.பி. அரசைக் கலைத்து, இராணுவத்தை அனுப்பி கரசேவைக் குண்டர்களைச் சுற்றி வளைத்து நடவடிக்கை எடுக்கவில்லை; (அமிர்தசரசு பொற்கோவில் மீது திரும்பத் திரும்ப இப்படிப்பட்ட தாக்குல் நடத்துவதையும் கவனிக்க வேண்டும்.) அதற்கு மாறாக மசூதியை முற்றாகத் தரைமட்டமாக்கி, திடீர் ராமன் கோவில் கட்டிமுடித்து, அயோத்தி - பைசாபாத் நகரைச் சூறையாடி, தலைவர்கள் தலைமறைவாகிவிடும் வரை காத்திருந்து 48 மணி நேரத்துக்குப் பின்னரே மத்திய போலீசை அனுப்பியது — கரசேவைக் குண்டர்களை வழியனுப்பி வைப்பதற்காக! அதுவும் அயோத்திக்கு மத்தியப்படையை அனுப்புவதற்கு முன்பாக பஜ்ரங்தள் தலைவர் வினய்கத்தியாருடன் பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கரசேவகர்கள் எதிர்ப்புக் காட்டாது, அமைதியாக வெளியேறுவார்களா என்று உறுதி செய்து

படிப்பகம்

www.padippakam.com



மசூதியை இடித்து அதன் கற்களை — கம்பிகளை எடுத்து ஊர்த்திரும்பும் கரசேவை குண்டர்கள்.

கொண்ட பின்னரே மீட்புப் பணிக்கு உத்திர விட்டார் இவ்வாறு இந்துமதவெறி பாசிஸ்டுகளின் சதிச் செயல் முழுமையாக நிறைவேறத் துணைபோனது நரசிம்மராவ் அரசு.

இந்து - இந்தி - இந்தியா என்கிற வகுப்பு வாதப் பிரச்சாரம் செய்வதில் முன்னோடியாக நிற்கும் அரசின் வானொலியும் வானொளியும் இப்போதும் இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு வக்காலத்து வாங்கும் வகையில் செய்திகள் பரப்பியன. நடந்த உண்மையை மறைத்து, மசூதியின் சுற்றுச் சுவருக்குச் சிறிது சேதம் நேர்ந்துவிட்டது என்று மழுப்பின; வெளி நாட்டு வானொலி, வானொளிகளில் நேரடியாகச் செய்தி வெளி வந்த பின்னரே மசூதி இடிக்கப்பட்டதை ஒப்புக் கொண்டன; கூடவே திடீர் ராமன் கோவிலும், சிலைகளும் பத்திரமாக இருப்பதாக இந்து மதவெறியர்களுக்கு உறுதியளித்து செய்தி பரப்பின. ஆகவே இந்து மதவெறிச் சதியில் காங்கிரசும் பங்கு வகித்தது என்பதே உண்மை.

பி.ஜே.பி., காங்கிரசோடு, பாசிச மும்மூர்த்திகளில் ஒன்றான, தமிழ் நாட்டில் பார்ப்பன ஆதிக்க மீட்பில் முழுமூச்சில் செயல்பட்டுவரும் பாசிச ஜெயா கும்பல் இந்து மதவெறி சதிச் செயலை ஆதரித்துத் துணை நின்றதில் ஆச்சரியமில்லை. தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்தை பி.ஜே.பி. - ஆர்.எஸ்.எஸ். புறக்கணித்தன. ஆனால் அதில் கலந்து கொண்ட பாசிச ஜெயா அந்த அமைப்புகளின் ஏகப்பிரதிநிதியாக மாறி இந்து மதவெறிச் சதிச் செயலுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார்.

மசூதியை இடிக்காமல், ராமன் கோவில் கட்டுவதையே தாம் ஆதரித்ததாக இப்போது சப்பைக் கட்டு கட்டுகிறார், ஜெயா. ஆனால் சட்டவிரோதமாக உ.பி. அரசு கையகப்படுத்திய நிலத்தில் கரசேவையை அனுமதிக்கவும்; நீதிமன்றத் தீர்ப்புக்கு விடக் கூடாதெனவும்; பெரும்பான்மையினரது உரிமை - உணர்வை மதிக்கும்படி இசுலாமியரை மிரட்டியும்தான் பாசிச ஜெயா பேசினார். கூடவே 1000 அ.தி.மு.க. குண்டர்களைக் கரசேவைக்கு அனுப்பினார்.

ஏற்கனவே ஒருதலைப்பட்சமாக இசுலாமிய அமைப்பின் மீது தாக்குதல் தொடுத்தும், இந்து மதவெறியை எதிர்த்த புரட்சிகர அமைப்புகள் மீது வழக்குப் போட்டும் வருகிறது. ஜெயா அரசு இப்போது இந்து மதவெறி அமைப்புகள் மீதான தடையை அமுலாக்குவதில் தாமதமும், ஒப்புக்கும் செயல்படுத்துகிறது.

''பாபரி மசூதி இடிப்புக்கும், தொடர்ந்து நடந்த மதப் படுகொலைகளுக்கும் இந்துமத வகுப்புவாத அமைப்புகள் மட்டுமல்ல; நரசிம்மராவ் அரசும்தான் பொறுப்பு; அவர் பதவி விலக வேண்டும்'' என்று தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணிக் கட்சிகள் கோருகின்றன. ஆனால் அவை நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசு அரசுடன் வெவ்வேறு அளவுகளில் சமரசம் செய்து கொண்டும், காஷ்மீர் - பஞ்சாப் பிரச்சினைகளில் பி.ஜே.பி.யுடன் உடன்பட்டும், வகுப்புவாதத்திற்கு எதிரான நாடு தழுவிய வலுவான மக்கள் திரள் இயக்கத்தை முன்னெடுக்கத் தவறியும் தமது கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்திக் கொண்டுள்ளன.

மசூதியை இடிக்கவே இந்துமத வெறியர்கள் முயலுவார்கள் என தே.மு. - இடதுசாரி கூட்டணியினர் உறுதிப்படக் கூறிவந்தனர் ஆனால் அதைத் தடுப்பதற்கான குறிப்பான தீர்மானம் எதுவும் தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்தில் முன் வைக்கவில்லை. அதற்கு பதிலாக காங்கிரசு கலாச்சாரத்தைப் பின்பற்றி அயோத்திப் பிரச்சினையில் பிரதமருக்கு முழு அதிகாரம் கொடுக்கும் தீர்மானத்தை சுர்ஜீத்-ஜோதிபாசு கும்பல் முன்மொழிய ஏகமனதாக நிறைவேற்றியது. தி.மு.க. உட்பட இவர்கள் அனைவருக்கும் பிரதமரின் மதவெறிக்குத் துணைபோகும் போக்கு தெரியாதா என்ன? பி.ஜே.பி. - ஆர்.எஸ்.எஸ்ஸை நம்பி ஏமாந்ததாக, துரோகம் செய்துவிட்டதாக நரசிம்மராவ் புலுகுவதற்கும், நரசிம்மராவை நம்பி முழு அதிகாரம் கொடுத்தோம் - அவர் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார் என்று கூறி தே.மு.-இ. கூட்டணி சமாதானம் கூறுவதற்கும் என்ன வேறுபாடு? எல்லாம் ஒன்றுதான்! நாட்டையும் மக்களையும் ஏய்க்கும் முயற்சிதான்!

# சமரசம் சர்வநாசம்! கொலைவாளை எடு! கொடியோர் செயல் அறு!

எப்படியோ, இந்து மதவெறி பாசிஸ்டுகள் தமது இலட்சியத்தின் முதற்கட்டப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டார்கள். இனிமேலும் அவர்களது சதித்திட்டத்தை நிறைவேற்றி இந்து மதவெறி பாசிச ஆட்சியை நிறுவுவதை தடுப்பது எப்படி என்பதுதான் நாட்டின் மதச்சார்பற்ற, ஜனநாயக, புரட்சிகரச் சக்திகளின் முன்நிற்கும் பிரச்சினை.

அதற்கே முதற்படியாக மதச்சார்பின்மையையும் ஜனநாயகத்தையும், ஒருமைப்பாட்டையும் காப்பது என்கிற பெயரில் காங்கிரசு மற்றும் தே.மு -இ.கூ. கட்சிகள் எடுக்கும் நடவ்டிக்கைகளின் போலித்தனத்தைப் பார்ப்போம்.

இடிக்கப்பட்ட இடத்தில் பாபரி மசூதியையும் கூடவே ராமன் கோவிலையும் கட்டித்தருவது மசூதி இடிப்புக்குக் காரணமானவர்களை வகுப்புக் கலவரங்களைத் தூண்டியதாகவும், வழிபாட்டுத் தளத்தை இடித்ததாகவும் கிரிமினல் வழக்குப் போட்டுத் தண்டிப்பது; உ.பி. மாநில பி.ஜே.பி. அரசை நீக்கி, சட்டசபையைக் கலைப்பது; நாட்டின் வகுப்புவாத அமைப்புகளைத் தடை செய்வது; அதன் உறுப்பினர்களாக பி.ஜே.பி. ஆளும் மாநிலத் தலைமை இருப்பதால் அந்த அமைச்சரவைகளையும் சட்டமன்றங்களையும் கலைப்பது; மசூதி இடிப்பு, மதக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த நிவாரணம் அளிப்பது; மத நல்லிணக்கத்துக்காக வகுப்புவாத எதிர்ப்பு முன்னணி அமைப்பது ஆகிய முடிவுகளை அறிவித்து அமுலாக்க முனைந்துள்ளது நரசிம்மராவ், அரசு.

முதலாவதாக, மதவெறிப் படுகொலைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைக்காக ராணுவம், துணை ராணுவம் தாமதமாக அனுப்பப்பட்டதால் ஒரு சில நாட்களிலேயே 1500-க்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டதோடு நூற்றுக்கணக்கான வழிபாட்டுத் தலங்களும், வீடுகளும்



படிப்பகம்

www.padippakam.com

தொழிலகங்கள் - கடைகளும் கொளுத்தி நாசமாக்கப்பட்டன. இதனால் இனி இந்த நாட்டில் பாதுகாப்பாக வாழ முடியும் என்ற இசுலாமியர்களது நம்பிக்கை பறிபோனது. பாதுகாப்புக்கு அனுப்பப்பட்ட படைகளே மதவெறித் தாண்டவமாடின.

இரண்டாவதாக, அயோத்தி நாச வேலை சதியை விசாரிப்பதற்கு மிகமிகத் தாமதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது: இதனால் சதிகாரர்களை அயோத்தியிலேயே சுற்றி வளைத்துக் கைது செய்யத் தவறியது; மசூதி இடிப்பில் பங்கு கொண்டு காயமடைந்து அயோத்தி மருத்துவமனையில் கிடந்த கரசேவைக் குண்டர்களைக் கைது செய்யும் முயற்சி எதிரிகளுக்குத் தெரிய வந்து அவர்களும் இரகசியமாக வெளியேறி விட்டனர். ஆகவே சதி முழுமையாக வெளிவராது.

மூன்றாவதாக, மதவெறி அமைப்புகளை தடை செய்வதும் அவற்றின் மாநில அரசுகளை கலைப்பதும் மிகமிகத் தாமதமாக நிறைவேற்றப்பட்டன. இதனால் மதவெறி அமைப்புகளின் தலைவர்களும் சதிகாரர்களும் தலைமறைவாகிவிடவும், இரகசியங்களைக் கடத்தவும் அழித்துவிடவும் போதிய நிதி திரட்டிக் கொள்ளவும் முடிந்தது. இன்னமும், ஆர்.எஸ்.எஸ்ஸின் அதிகார பூர்வப் பத்திரிக்கையான ''ஆர்கனைசர்'' தடை செய்யப்படவில்லை; பல வண்ணத்தில் ''கரசேவைச் சிறப்பிதழ்'' வெளிவரும் என்று அது அறிவித்துள்ளது.

நான்காவதாக, பா.ஜ.க. ஆண்ட மாநிலங்களிலும், அதன் கூட்டாளியான பாசிச ஜெயா ஆளும் தமிழ் நாட்டிலும் மட்டுமல்ல; காஷ்மீரிலும், பஞ்சாபிலும் இந்து மதவெறி பாசிச அமைப்புகளின் துணையோடு அரசு பயங்கரவாத ஆட்சி நடப்பதாலும் தடை உத்திரவை முழுமையாக அமுலாக்க முடியாத நிலை உள்ளது.

ஐந்தாவதாக, பா.ஜ.க., சிவசேனா, ஏ.பி.வி.பி., தமிழ்நாடு பிராமணர் சங்கம், இந்து முன்னணி போன்ற பிற துணை அமைப்புகள் தடை செய்யப்படவில்லை. அவற்றின் நிழலில் இந்து மதவெறி பாசிஸ்டுகள் ஒதுங்கியுள்ளனர்.

ஆறாவதாக, மகந்துகள், சாமியார்கள், சந்நியாசிகள், மடாதிபதிகள், பீடாதிபதிகள் போன்ற மதத்தலைவர்களுக்கும் அவர்களது அமைப்புகளுக்கும் தடை இல்லை. இவர்களை முன்னிறுத்தித்தான் இந்து மதவெறி பாசிஸ்டுகள் தமது சதிச் செயல்களை நிறைவேற்றுகின்றனர். ராமன் கோவில் அறக்கட்டளை உறுப்பினர்களான அயோத்தி நகர மகந்துகளான ராமச்சந்திர பரமஹம்ஸ் மற்றும் நிருத்திய கோபால் தாஸ் ஆகிய இருவரையும் கைது செய்யப் போன போலீசு திடீர் நடவடிக்கை எடுக்கவில்லை; முன் அறிவிப்புக் கொடுத்து ஒரு நாள் தாமதித்தது; இதனால் அங்கு திரட்டப்பட்ட இந்து மதவெறி பாசிச கஞ்சா சாமியார்கள், குண்டர்களும் போலீசை சூழ்ந்து கொண்டு விரட்டிவிட்டனர். இது போன்றுதான் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.



'ராம்' என மொட்டையடித்து நிற்கும் சந்நியாசி; அவமானச் சின்னம்

ஏழாவதாக, அரசு எந்திரத்தின் எல்லா மட்டங்களிலும் இந்து மதவெறி பாசிஸ்டுகள் ஊடுருவியுள்ளனர். இதனால் அவர்களுக்கு எதிராக எந்தவிதமான அதிரடி நடவடிக்கையும் எடுக்க முடியாமல் நரசிம்மராவ் அரசு திணறுகிறது. அப்படிக் கறாரான, கடும் நடவடிக்கை எடுப்பதிலும் அதற்கு உடன்பாடு இல்லை. இதனால்தான் மதவெறி பாசிஸ்டுகள் மேலும் திமிரோடு பேசியும் நடந்தும் வருகின்றனர்.

எட்டாவதாக, மசூதி இடிக்கப்படும் செய்தி அறிந்தும் அதிரடி நடவடிக்கையாக அதன் வளாகத்தை மத்திய அரசுப் படை கைப்பற்றியிருக்க வேண்டும்; ஆனால் அங்கு திடீர் ராமன் கோவில் கட்டுவதற்கு அனுமதித்து விட்டதால் அதை அகற்றுவதும், அந்த இடத்தில் மசூதியை மறுபடியும் கட்டுவதும் சிக்கலாகிவிட்டது. ராமன் கோவிலை அகற்றினால் இந்து மத உணர்வு புண்படும் என்கிற பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. சங்கராச்சாரிகள் மட்டுமல்ல கிருஷ்ணய்யர் போன்ற போலி முற்போக்கு கள்கூட அதை எதிர்க்கின்றனர். எந்த இடத்தில் மசூதி கட்டுவது என்கிற பிரச்சினையில் பாசிச காங்கிரசார் இப்போதே மழுப்புகின்றனர். சட்ட விரோத கிரிமினல் முறையில் கட்டப்பட்டுள்ள திடீர் ராமன் கோவிலில் பூசை நடத்துவதோடு பக்தர்கள் தரிசனத்துக்கும் திறந்துவிடத் தயாராக உள்ளது.

ஒன்பதாவதாக, மசூதியைப் பாதுகாக்கத் தவறிய மத்திய அரசு அதை மீண்டும் கட்டித் தருவதுதான் நியாயமானது; அதன் கடமையும் ஆகும். ஆனால் மசூதி மட்டுமல்ல, ராமன் கோவிலும் கட்டித் தருவோம் என்று ஒரு மத நிறுவனத்தின் வேலையைச் செய்வதாக வாக்குறுதியளிக்கிறது. இந்துக்களைத் திருப்திப் படுத்துவதற்காகவே இரு இசுலாமிய அடிப்படைவாத அமைப்புகளையும் தடை செய்யும் நடவடிக்கையையும் சேர்த்துக் கொண்டுள்ளனர். இந்து மதவெறி பாசிஸ்டுகளின் தாக்குதலுக்குப் பலியானவர்களுக்கு நிவாரணமளிப்பதுதான் அரசின் கடமையாகும். ஆனால் அயோத்தி கலவரத்தில் இறந்துபோன மதவெறி குண்டர்களுக்கும் நிவாரணமளித்து தியாகிகளாக்குகிறது நரசிம்மராவ் அரசு.

பத்தாவதாக, இந்து மதவெறி பாசிஸ்டுகள் மீதான இப்போதைய நடவடிக்கைக்கு இன்னொரு முக்கியமான காரணம், அயோத்தியில் நடந்த நாசகாரச் சதிவேலையினால் இந்தியாவின் மதச்சார்பின்மை, ஜனநாயகம் ஆகியவற்றின் போலித்தனம் உலகம் முழுவதும் அம்பலமாகி கடும் கண்டனத்துக்கும் எதிர் விளைவுகளுக்கும் இலக்காகி உள்ளது. வங்கதேசத்திலும், பாகிஸ்தானிலும் சிறுபான்மையினரான இந்துக்களும் அவர்களுடைய சொத்துக்களும் தாக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளன. இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இசுலாமியர் உரிமை, உயிரைக் காக்கத் தவறியுள்ள காங்கிரசு அரசும் அரசியல் கட்சிகளும் அதற்கு கண்டனம் தெரிவித்துள்ளன. வங்க தேசம், பாக். மட்டுமல்ல, துபாய், இங்கிலாந்திலும் இந்துக் கோவில்கள் தாக்கப்பட்டுள்ளன; இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. ஈரானில் முழுக் கடை அடைப்பும், பேரணிகளும் நடந்துள்ளன. உலக இசுலாமிய நாடுகள் மாநாட்டிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, பெட்ரோலிய விற்பனையை நிறுத்தவும், ஐ.நா.சபையில் பிரச்சினையை எழுப்பவும் போவதாக அவை மிரட்டுகின்றன. இந்த எதிர் விளைவுகள், நிர்ப்பந்தங்களைச் சமாளிப்பதற்காகவே, இந்து மத பாசிஸ்டுகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதாக இந்திய அரசு காட்டிக் கொள்கிறது.

மொத்தத்தில் காங்கிரசு சிறுபான்மையினருக்கு எதிரானதல்ல; பாதுகாவலன் தான் என்று காட்டிக் கொள்வதற்காக சில கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுக்கிறது; அதே சமயம் பெரும்பான்மையினரான இந்துக்களின் ஓட்டுக்கள் விலகிப் போய்விடக் கூடாது என்பதில் கவனமாக நடந்து கொண்டு இரட்டை நாடகமாடுகிறது.

ஆகவே, பாசிச காங்கிரசும் அடிப்படையில் இந்து மதவெறிச் சக்தியாகவே உள்ளது; அது இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு எதிராக உருப்படியான ஒரு காரியமும் செய்யாது என்பது தெளிவாகிறது.

தேசிய முன்னணியும் - இடதுசாரி கூட்டணியும் இந்து மத வகுப்புவாதத்திற்கு எதிராகப் பெரும் கூச்சல் போடுகின்றன. ஆனால் அதை எதிர்த்து முறியடிக்கும் திறனும் தகுதியும் சிறிதும் அவற்றிடம் இல்லை. அவற்றின் கையாலாகத்தனம் ஏற்கனவே நிரூபணமாகிவிட்டது. முக்கியமாக இந்து மத வகுப்புவாதம் என்பதாக மட்டும் எதிரிகள் இல்லை. பாசிச அரசியல் சக்தியாகவும், பயங்கரவாத சமூக விரோதிகளாகவும் வளர்ந்து வருகிறார்கள்; இந்த முறையில் எதிர்த் தாக்குதல் தொடுப்பதற்கான சக்தி தே.மு.-இ.கூ. கட்சிகளிடம் கிடையாது.

குறிப்பாக, தே.மு.வின் முக்கிய உறுப்



படிப்பகம்

www.padippakam.com

பாகிய ஜனதா தளம் மதவெறியை எதிர்த்து நிற்கும் அளவுக்கு அணிகளைக் கொண்டிருக்கவில்லை. எனவேதான் பத்திரிக்கைப் பேட்டி - கண்டன அறிக்கை, தேர்தல் காலப் பிரச்சாரம் ஆகியவற்றைத் தாண்டி எந்தவொரு இயக்கமும் எடுக்க முடியாமல் முடங்கிப் போய் உள்ளது.

இரண்டு போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும், ஒருபுறம் தே.மு.யுடனான இடது சாரி கூட்டை உடைத்துக்கொண்டு காங்கிரசில் முற்போக்குகளைத் தேடிக் கூடுவதற்கு அலைகின்றன; மறுபுறம் பஞ்சாப், காஷ்மீர், ஈழம், பாக். எதிர்ப்பு போன்ற பல பிரச்சினைகளில் பா.ஜ.க.வுடன் அரசியல் உடன்பாடு கண்டுள்ளது. அதோடு அக்கட்சிகளின் கீழுள்ள தொழிலாளர்களும், இளைஞர்களும் தொழிற்சங்கப் பொருளாதாரவாதம் மற்றும் பிழைப்புவாத அரசியலுக்குள் மூழ்கடிக்கப் பட்டுள்ளார்கள்; அவர்களை வைத்து இந்து மதவெறி பாசிச சக்திகளை முறியடிக்கும் போர்க்குணமிக்க போராட்டங்களை போலிக் கம்யூனிஸ்டுகள் நடத்தவே முடியாது.

அயோத்தியில் நடந்த நாசகாரச் சம்பவம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கடும் கண்டனத்திற்கு உள்ளாகி இருக்கிறது; குறிப்பாக, பெரும்பான்மையினரான இந்துக்களிடையே அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது; வடநாட்டில்கூட இதுவரை பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். ஆதரவு நிலையிலிருந்த நடுத்தர மக்களிடையே அவற்றின் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது; மசூதியை இடிப்பதன் மூலம் இந்துக்களின் ஆதரவைப் பெருக்கிக் கொள்ள எண்ணிய அந்த அமைப்புகள், இருந்த ஆதரவையும் இழந்துவிட்டன; நரசிம்மராவ் எடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளினால் இந்து மதவெறி அமைப்புகள் தலையெடுக்க முடியாமல் ஒடுக்கப்படும் —— என்கிற கருத்தும் பரவலான நம்பிக்கையும் ஏற்படுத்தப்படுகிறது.

ஆனால் மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் இதை நம்பி மோசம் போய் விடக்கூடாது. மசூதியை இடித்ததும் எழுந்த அதிர்ச்சி அலையை எதிர் கொள்வதற்காக ஒப்புக்கு ''துரதிருஷ்டவசமானது'' என்று பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் சிலர் கூறினர். ஆனால் அன்றே விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள், சிவசேனா தலைவர்கள் வெற்றிக்களிப்பில் திமிர்வாதம் பேசினர். நாடுமுழுவதும் உள்ள இந்து மதவெறி பாசிசத் தொண்டர்கள் ''தேசிய அவமானச் சின்னம் அகன்றது; இந்து சக்தியின் வெற்றி'' என்று முழக்கமிட்டுக் கொண்டாடினர்.

அடுத்த நாளே, இந்து மத பாசிசத் தலைவர்கள் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர். அதில் மசூதி இடிப்பை நியாயப்படுத்தி, எதிராளிகள் மீது பழிபோட்டு, அயோத்தியோடு, மதுரா, காசி மசூதிகளின் மீதான உரிமையையும் விட்டுத்தர சம்மதிக்க வேண்டும் என்று மிரட்டியுள்ளனர். மசூதி இடிப்புச் சம்பவத்தாலும், பிற கட்சிகள், அரசியல் தாக்குதலாலும் தாங்கள் பலவீனமடைந்து விடவில்லை; மேலும் பலம் பெற்றுள்ளோம் என்று திமிரோடு பேசி வரு



மசூதியை இடித்து மதவெறியர்கள் உருவாக்கிய திடீர் ராமர் கோயிலை வணங்கும் ராணுவ சிப்பாய்.

கின்றனர். எதிர்த் தாக்குதலும் தொடுத்து வருகின்றனர்.

அத்துவானி முதலியோர் கைதைக் கண்டித்து நாடு முழுவதும் ''பாரத் பந்த்'' நடத்தினர்; அவர்களின் மாநில அரசுகளைக் கலைத்ததை எதிர்த்தும் அந்தந்த மாநிலங்களில் ''பந்த்'' நடத்தினர்; மதவெறி அமைப்புகளுக்குத் தடை விதித்ததை எதிர்த்து கருப்புச் சின்னம் அணிந்து போராடினர். இந்தக் கைதும், கலைப்பும், தடையும் சட்ட விரோதமானவை; ஜனநாயக விரோதமானவை; இந்திரா காந்தி 1975 - 77-ல் கொண்டு வந்த அவசர நிலை - பாசிச ஒடுக்கு முறை போன்றவை என்று சித்தரிக்கின்றன. இவற்றுக்கு எதிராக நீதிமன்றத்திலும், மக்கள் மத்தியிலும் போராடுவோம் என்று மிரட்டுகின்றன. சட்டம், ஜனநாயகம், நீதிமன்றம் மக்கள் மன்றம் என்று இவர்கள் பேசுவது, எல்லாம் சாத்தான் வேதம் ஓதுவதைப் போன்றவைதான்.

மசூதி இடிக்கப்பட்ட உடன் மக்களிடையே நிலவிய அதிர்ச்சி அலை காரணமாகவும், நேரடியாக நியாயப்படுத்த முடியாததாலும் இந்தியன் எக்ஸ்பிரஸ் - தினமணி முதல் துக்ளக் வரையிலான பார்ப்பன ஏடுகள் அதைக் கடுமையாகக் கண்டித்து தலையங்கம் தீட்டின. ஆனால் சங்கராச்சாரி முதலிய பார்ப்பன குருபீடங்கள் பச்சைக் கொடி காட்டியவுடன் இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு வக்காலத்து வாங்குவதில் இறங்கிவிட்டன; கைது, தடை, ஆட்சிக் கலைப்பு போன்ற நடவடிக்கைகள் அதிகமானவை; இந்து மதவாத அமைப்புகளுக்கு மக்களிடையே ஆதரவை ஏற்படுத்திவிடும் என்கிற சாக்குகளைக் கூறி அவற்றுக்குத் துணை நிற்கின்றன.

ஆகவே, இந்து மதவெறி பாசிஸ்டுகள் வலுவிழந்து போவார்கள் என்கிற பிரமையில் மதச் சார்பற்ற, ஜனநாயக சக்திகள் வாளாவிருந்துவிடக் கூடாது. தூசு கூட கூட்டாமல், தானே அகன்று விடாது; கடுமையான எதிர் நடவடிக்கைகளினால்தான் இந்து மதவெறி பாசிஸ்டுகளை முறியடிக்க முடியும்.

இந்த நிலையில் இந்து மதவெறி பாசிஸ்டுகளையும் அவர்களுடன் மறைமுக, நேரடி கூட்டுச் சேர்ந்துள்ள பாசிச காங்கிரசு - ஜெயா கும்பல்களையும் முறியடிக்க வேண்டுமானால், அவர்களது சதித் திட்டங்களைத் தகர்க்க வேண்டுமானால் ஒரு புதிய உண்மையான மதச் சார்பற்ற, ஜனநாயகப் புரட்சிகர அணியை கட்டியெழுப்பிட வேண்டும்.

அது பின்வரும் கடமைகளை உடனடியாக மேற்கொள்ளவும் வேண்டும்:

—— இந்து மதவெறி பாசிச அமைப்புகளின் தன்மைகள், நோக்கங்களை எதிர்த்துப் பல்வேறு வடிவங்களிலும் மக்களிடையே விரிவாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும். அந்த அமைப்புகள் தங்கள் பகுதிகளில், இயங்கவிடாமல் சமூகக் கட்டுப்பாடுகள் போட்டும் எதிர்த்துத் தாக்கும் வகையில் முற்றுகையிட்டும் விரட்ட வேண்டும்.

—— இந்துமத வழிபாடுகள், விழாக்கள், சடங்குகள் போன்ற வடிவங்களில் புகுந்து கொண்டு மதவெறிப் பிரச்சாரங்கள் செய்கிறார்கள். அவற்றை இனங்கண்டு இந்து மதவெறி பாசிஸ்டுகளைத் தனிமைப்படுத்தி அடித்து விரட்ட வேண்டும்.

—— உள்ளூர் அளவில் சில மேல் சாதிப் பெரிய மனிதர்களை முன்னிறுத்தி, உதிரித் தொழிலாளர்கள் மத்தியில் இருந்து சிலரை விலைபேசி அடியாட்களாக நியமித்துக் கொண்டு மற்ற பிரிவு மக்களுக்கு எதிராக மோதவிட்டு இந்து மதவெறி பாசிஸ்டுகள் இரத்தம் குடிக்கிறார்கள். மேல்சாதி தனிநபர் ஆதிக்கம் மற்றும் கலவர சமயங்களில் கொள்ளை சூறையாடல் வசதி கருதி இத்தகையவர்கள் செயல்படுகிறார்கள்; இதை அம்பலப்படுத்தி முறியடிக்கவேண்டும்.

—— பார்ப்பன - பனியா கும்பலின் அரசியல் ஆதிக்கமே இந்து மதவெறி பாசிஸ்டுகள் நோக்கம்' என்பதால், அவர்களுக்கு எதிராக தாழ்த்தப்பட்ட - பழங்குடி மற்றும் பின்தங்கிய - சிறுபான்மை மக்களை அணிதிரட்ட வேண்டும். குறிப்பாக செயல் பூர்வமாக இதைச் செய்வதற்காக திடீரென்று கோவில் கருவறைகளுக்குள் நுழைவது போன்ற போராட்டங்களை நடத்த வேண்டும்.

—— தடை செய்யப்பட்ட இந்து மதவெறி அமைப்புகள் மற்றும் துணை அமைப்புகள் ரகசியமாகவோ, வெளிப்படையாகவோ பேரணிகள், அணிவகுப்பு பயிற்சிகள் நடத்த முயன்றால் திடீர் தலையீடு செய்து கலைத்து விரட்ட வேண்டும்.

—— குறிப்பாக, தமிழ் நாட்டில் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் பிரதிநிதியாக உள்ள பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலையும் அதன் கூட்டாளிகளை எதிர்த்துப் போர்க்குணத்துடன் போராடி, அவர்களது ஆட்சியைத் தூக்கியெறிய வேண்டும்.

—— எல்லாவற்றுக்கும் மேலாக, நாம் எதிர்கொண்டிருப்பவர்கள் இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகள்; போலீசு - அதிகாரிகள் முதல் பத்திரிக்கையாளர்கள் வரை அதிகாரபலமும் ஆள்பலமும் பணபலமும் நிரம்பியவர்கள். அத்தகைய சக்திகளை எதிர்த்து முறியடிப்பதற்குத் தேவையான தற்காப்புப் பயிற்சியும், பலமும் பெற வேண்டும்.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

## பொன்னூர்:

# சாதிச்சண்டையில் குளிர்காயும் போலீசும் சுயநலமிகளும்!

பொன்னூர் வந்தவாசிக்கு அருகிலுள்ள சிறு கிராமம். கடந்த நவம்பரில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் மீது போலீசார் ஒரு போரே நடத்தியுள்ளனர் எனக் கூற லாம். கிட்டத்தட்ட 250 போலீசார் 4 மணி நேரத்திற்கும் மேலாக, இச்சிறு கிராமத்தின் காலனிகள் மீது தாக்குதல் நடத்தியிருக்கின் றனர். தாக்குதலின் கொடூரமும், விளைவுக ளும் நமது அனுமானிப்புகளையெல்லாம் விஞ்சி நிற்கின்றன.

கிராமத்தில் பெரும்பான்மையினராக உள்ள செங்குந்த முதலியார் சமூகத்தினர். கைத்தறி நெசவுத் தொழில் செய்து வருகின் றனர். கைத்தறி நூல் பாவு கஞ்சி போடவும், இழை பிரிக்கவும் இந்தப் பொது இடத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். தாழ்த்தப்பட் டோர், பொதுக்கூட்டம், திருவிழா, விளை யாட்டுப் போட்டிகள் போன்ற பொது நிகழ்ச்சிக்கு இவ்விடத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். நான்கு வருடங்களுக்கு முன்பு, இரு சமூகத்தினருக்கும் இடையே பொது இடத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக, பிரச்சினை எழுந்த பொழுது, பஞ்சாயத்து தலைவராக இருந்த மண்ணு சாமி முதலியார் எனும் தி.மு.க. பிரமுகர், 'நாங்கள்தான் - முதலியார் சமூகத்தினர் - இந்த இடத்தை ஆண்டாண்டு காலமாக பயன்படுத்தி வருகிறோம்' என்ற காரணத் தைக்கூறி, தாழ்த்தப்பட்டோர் பொது இடத் தைப் பயன்படுத்த இடைக்கால தடையுத்த ரவு பெற்றார்.

கடந்த அக்டோபரில் அனுமதி பெற்று, தாழ்த்தப்பட்டோர் பொது இடத் தில் நடத்த முயன்ற நாடகமும், பொதுக் கூட்டமும் இடையிலேயே போலீசாரால் தடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இரு சமூகத்தினிடையே எழுந்த கலவர சூழ்நி லையை மட்டுப்படுத்த ஓர் அமைதிக் கூட் டம் செய்யாறு மாவட்ட வருவாய் அதிகாரி யால் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் ஏற்க னவே, 'தடையுத்தரவு' இருப்பதைக் கார ணம் காட்டி, முதலியார் பிரிவினர் முடிவு காண மறுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் 'தடையுத்தரவு இரு பிரிவின ருக்கும் பொருந்தும்' எனக்கூறி, முதலியார் சமூகத்தார் கஞ்சி, பாவு போடுவதைத் தடுத் துள்ளனர். இதனால் எழுந்த தகராறில், தாழ்த்தப்பட்டோர் தாக்கத் தொடங்க, முத லியார் பிரிவினர் எதிர்த்தாக்குதல் தொடுக்க காவல்பணிபுரிந்த போலீசாரே உதவியுள்ளனர்.

இதன் பின்னர்தான், 8.11.92 அன்று போலீசாரின் திட்டமிடப்பட்ட தாக்குதல், மண்ணுசாமி முதலியார், அவர் மகன் செல் வம் மற்றும் சில முதலியார் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் நடந் துள்ளது. தாக்குதலில் ஈடுபட்டிருந்த போலீ சார் குடித்திருந்ததாகவும், மண்ணுசாமி முத லியாரே இதற்கு ஏற்பாடு செய்ததாகவும் தாக்குதலுக்குள்ளானார்கள் கூறுகின்றனர். இளைஞர்கள், நடுத்தர வயதினர், முதலிய வர்கள் மட்டுமின்றி, பெண்களும், சிறுவர்க ளும், குழந்தைகளும் குறிவைத்து போலீசா ரால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

வயதான பாக்கியம், கர்ப்பிணியான சாந்தி, அன்னக்கிளி, மற்றும் ஆசிரியை மகாலெட்சுமி ஆகியோர் போலீசாரின் கடு மையான தாக்குதலுக்கும், அவமானப்ப டுத்துதலுக்கும் ஆளாகியுள்ளனர். இதில், மறுநாளே பாக்கியம் இறந்துவிட்டார்; சாந் திக்கு தாக்குதலின் பொழுதே பிரசவ வலி ஏற்பட்டு, மாட்டுத் தொழுவத்தில் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டிய அவல நிலை. பெரும்பான்மையினோரின் வீடுகள் துவம் சம் செய்யப்பட்டு, ரூபாய். 27,000/-க்கும் மேற்பட்ட ரொக்கத் தொகையினை போலீ சார் திருடிச் சென்றுள்ளனர்.

நாற்பதுக்கும் மேலான தாழ்த்தப்பட்ட வர்களை கைது செய்துள்ள போலீசார், கல வரத்துக்கு முக்கிய தூண்டுகோலாக இருந்த மண்ணுசாமி முதலியார், செல்வம் மற்றும் பிற முதலியார் சமூகத்தினரை கைது செய்ய வில்லை. மண்ணுசாமி முதலியார் தனது பணபலம், செல்வக்கின் மூலம் அதிகார வர்க்கத்தின் அனைத்துத் தரப்பினரையும் திருப்தி செய்துள்ளதாக தகவல்கள் வெளி வந்துள்ளன. போலீசார், 'கோஷ்டி மோதல்' எனப் பொய்யான செய்தியை பத் திரிகைகளுக்குக் கொடுத்துள்ளதை இச் சம் பவத்தை அம்பலப்படுத்தி போராடி வரும் அம்பேத்கார் இயக்கங்களும், தாக்கதலுக் குள்ளானவர்களும் வன்மையாக கண்டித் துள்ளனர். தாழ்த்தப்பட்ட சமூக மாணவர் கள், அரசையும், அமைச்சர்களையும் அதி காரிகளையும் கேலியான முறையில் சித் ரித்து கோட்டை வரை ஊர்வலமாக சென் றுள்ளனர். மிகப் பெரும்பாலான சாதிக் கலவரங்களில் பிற்படுத்தப்பட்ட சாதிகளிலே சமூக ரீதியாகவும், பொருளா தார ரீதியாகவும் மிகக் கீழ் நிலையிலுள்ள வர்களே, சாதி வெறியூட்டப்பட்டு, தாழ்த் தப்பட்டோருக்கு எதிராக நிறுத்தப்படுகின் றனர். தமிழ்நாட்டின் வடபகுதிகளில் நடந்த வன்னியர் - தாழ்த்தப்பட்டோர் கலவரங்க ளிலும், தென் பகுதிகளில் நடந்து வரும் கள்ளர், தேவர் தாழ்த்தப்பட்டோர் மோதல்களிலும் இது தெரியவரும். இம் மோதலிலே கூட, ஒரு சாராரான செங்குந்த முதலியார், முதலியார் சமூகத்திலேயே கீழ் நிலையில் உள்ளவர்கள்தான்; பொருளா தார ரீதியாக, இச் சமூகத்தின் பெரும்பான் மையோர் தாழ்த்தப்பட் சமூகத்தினர் போலவே வாழ்கின்றனர். ஆனால், மண் ணுசாமி முதலியார் போன்ற சுயநல, ஆதிக்க சக்திகளால் 'சாதி வெறி' எனும் போதைக்கு அடிமையாகின்றனர். அரசாங் கமும் அதிகார வர்க்கமும் ஆதிக்க சக்திக ளின் பண பலத்திற்குள், செல்வாக்கிற்கும் அடிபணிவதுடன், தனக்கே உரித்தான பிரித்தாலும் சூழ்ச்சி, 'சாதிப் பற்று' காரண மாகவும் தாழ்த்தப்பட்டோர் போன்ற கீழ் நிலை சாதிக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கின்றது. இதன் மூலம், 'சாதிய கட்டு மானத்தை' அடக்குமுறையால் பேணிக் காக்க முயல்கிறது.

வளர்ந்து வரும் சமூகப் பொருளா தார, அரசியல் காரணிகள் காரணமாக, தாழ்த்தப்பட்டோர் கோரும் உரிமைகளை யும், சலுகைகளையும் 'மேல்சாதி' எனக் கூறிக் கொள்வோர்கள் அங்கீகரித்துத்தான் தீர வேண்டும். மேலும், சந்தைப் பொருளா தார வளர்ச்சி, பிற 'மேல் சாதி'களில் உள்ள மிகப் பெரும்பான்மையினரைக் கூட சமூக, பொருளாதார ரீதியாக தாழ்த்தப்பட்டோர் நிலைக்கே தாழ்த்தி விடுகின்றது. இதைப் புரிந்து கொள்ளும் பொழுதுதான் 'சாதி வெறி' என்னும் போதைக்கு அடிமையாகா மல், தங்களிடையே உள்ள சுயநலமிகளை யும், ஆதிக்க சக்திகளையும், மட்டுமின்றி அதிகரித்துவரும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்த்து, இரு சாரரும் இணைந்து போராடி வெற்றியடைய முடி யும்.

● செல்வம்



அன்னக்கிளி

அரசாங்கமும் அதிகார வர்க் கமும் ஆதிக்க சக்திகளின் பண பலத்திற்கும், செல் வாக்கிற்கும் அடிபணிவது டன், தனக்கே உரித்தான பிரித்தாலும் சூழ்ச்சி, 'சாதிப் பற்று' காரணமாகவும் தாழ்த்தப்பட்டோர் போன்ற கீழ் நிலை சாதிக்கு எதிரா கவே நடவடிக்கை எடுக் கின்றது. இதன் மூலம், 'சாதிய கட்டுமானத்தை' அடக்குமுறையால் பேணிக் காக்க முயல்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# மூடப்பழக்கத்தின் கோரப்பிடியில் புறக்கணிக்கப்பட்ட ஆதிவாசிகள்

விட்டலாச்சாரியார் திரைப்படங்களில் வரும் பேய்களையும், சூனியக்காரர்களையும் கண்டு நாம் சிரித்திருக்கின்றோம் ஆனால், குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பரோடவிலிருந்து 100 கி.மீட்டருக்கு அப்பாலுள்ள தொலைதூரக் கிராமமான பர்தோலி கிராமத்தில் வாழும் ஆதிவாசிகளிடையே நிலைமை அவ்வாறு இல்லை. இந்த மூடப்பழக்க வழக்கங்களின் மீது அவர்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இருக்கிறது அதன் காரணமாக, 'சூனியக்காரிகள்' என முத்திரை குத்தப்பட்டு, கிராம மக்கள் அனைவரின் முன்னிலையிலேயே, மாந்திரீகர்களால் தாக்கப்படுகின்றார்கள் உயிரைப் பறிகொடுக்கின்றார்கள்.

''நான் சூனியக்காரி இல்லை'' என்ற உண்மையை திரும்பத் திரும்பக் கூறியும், 30 வயதான ஜிங்கிலி பென், தனது கணவனின் முன்பே உயிரைப் பறிகொடுத்திருக்கிறார். இது மட்டுமின்றி மேலும் ஏழு பெண்கள் உயிர் பிழைப்பதற்காக ''நாங்கள் சூனியக்காரிகள்''தான் என்ற பொய்யை ஒத்துக் கொண்டு, அதன் காரணமாக பலமான தாக்குதலுக்குள்ளாகி, ரணங்களோடு வாழ்ந்து வருகிறார்கள். ஒரு ஆதிவாசி வீட்டின் இரு குழந்தைகள் காலராவினால் இறந்தது. ஆனால், அதற்கு தம்பியின் மனைவிக்கு 'பேய்' பிடித்திருப்பதுதான் காரணம் எனக் கூறி, அப்பெண்ணை வீட்டை விட்டே துரத்தியடித்துள்ளனர்.

இதே போன்று, மேற்கு மத்தியப் பிரதேசத்தில், ஜாபுவா மற்றும் தார் மாவட்டப் பகுதிகளில் ஒரே வாரத்தில் ஐந்து பெண்கள் கற்களால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இக்கோர சம்பவங்கள் கிராம மக்கள் முன்னிலையிலேயே நடப்பினும், அவர்கள் மூடநம்பிக்கை, அறியாமை காரணமாகவும், அச்சத்தின் காரணமாகவும் இவற்றைத் தடுக்க முயல்வதில்லை.

சமீபகாலமாக, இப்பகுதிகளில் பரவி வரும் காலராவினால் பலபேர் உயிர் இழந்திருப்பதுடன், ஒருவித தொற்று நோயினால் கால்நடைகளுக்கும் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம், இம்மக்கள் தமது தெய்வமான 'மாதா' கோபமடைந்துள்ளதாகவும், கிராமங்களின் 'துர்ஆவிகள்' நடமாடுவதாகவும் நம்புகின்றனர். இந்த அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு, இங்கு வாழும் மாந்திரீகர்கள், 'மாதா'வை சாந்தப்படுத்துவதற்கும், 'துர் ஆவிகளை' விரட்டவும் பூஜைகள் நடத்துகின்றனர். பூஜைகளில் கலந்து கொள்ளும் கிராம மக்கள் அனைவரின் முன்னிலையிலேயே, ஊதுபத்தியின் வாசனையைக் கொண்டு, துர் ஆவி பிடித்துள்ள பெண்களை கண்டுபிடித்து தாங்கள் சூனியக்காரி



சூன்யக்காரிகள்தான் என ஒத்துக்கொண்டு உயிர் பிழைத்துள்ள ம.பி.யைச் சேர்ந்த பழங்குடிப் பெண்கள்; அனாதரவின் உருவங்கள்



படிப்பகம்

www.padippakam.com

# மடமையை வளர்க்கும் 'மாண்புமிகு'



ஒருவரின் முதுகுப் பகுதியை தனது கட்டைவிரலால் தொட்டுக் கொண்டிருக்கிறாரே அவரை தொழில் முறை மருத்துவர் என நினைத்தால் ஏமாந்து போவீர்கள். அவர் - லோக்நாத் மிஸ்ரா - அஸ்ஸாம் மற்றும் நாகலாந்து மாநிலங்களின் கவர்னர். அதனுடன் நோய்களுக்கு சிகிச்சையும் அளித்து வருகின்றார். ஆனால், நமக்குத் தெரிந்துள்ள மருத்துவமுறைகள் மூலம் அல்ல. 'பாதிப்புக்குள்ளான பகுதியைத் தனது விரலால் தொட்டு, அதற்கு ஏற்ற சில மந்திரங்களை உச்சரிப்பதன் மூலம்' குணப்படுத்தி வருகிறாராம். 'இது எப்படி சாத்தியம்?' என வினவும் பொழுது, ''நான் மந்திர ஒலிகளை குறிப்பிட்ட உயர் அழுத்தத்தில், ஏவுகணை போல, பாதிப்புக்குள்ளான பகுதியைத் தாக்கச் செய்து குணப்படுத்துகின்றேன்'' எனக் கூறிவருகிறார். இவர் தொலை தூரத்தில் பாம்பு கடித்து, இறக்காமல் இருக்கும் ஒருவரை, தொலைபேசி மூலம் மந்திரங்களை உச்சரித்தே பிழைக்க வைத்து விடுவேன் என அடித்துக் சொல்கிறார். கொடிய விஷமுள்ள பாம்புகளையும், எனது மந்திரங்கள் மூலம் கட்டுப்படுத்தி விடுவேன் என்றும், புற்றுநோய்க்கு மந்திரங்களால் குணம்காண முயன்று வருவதாகவும் கூறுகின்றார். பெரிய மருத்துவ நிபுணர்களால் கைவிடப்பட்ட வாத நோயாளிகளைக் கூட குணப்படுத்தியுள்ளதாகக் கூறும் இவர், தனக்கு மட்டும் ஹோமியோபதி மருத்துவ முறைப்படி சிகிச்சை செய்து கொள்வாராம்; மந்திர முறையினை கையாள மாட்டாராம். என்னே முரண்பாடு! இதுபோன்ற மடக் கர்த்தாக்கள் எப்படி மக்களிடமுள்ள அறியாமையைப் போக்குவார்கள்?

கள்தான் என ஒத்துக்கொள்ளச் சொல்வது; மறுப்பவர்களை கற்களைக் கொண்டு தாக்குவது; அவர்களில் மண்டையில் தேங்காய்களால் பலமுறை அடித்து உடைப்பது; ஒத்துக் கொள்பவர்களை தென்னை, பனை மட்டைகளால் கடுமையாக தாக்குவது; இதன் மூலம் 'துர்ஆவிகளை' விரட்டிவிட்டதாக மக்களை நம்பவைக்கும் மாந்திரீகர்கள் தங்களின் மீதான அச்சம் கலந்த பக்தியையும் சமூக மதிப்பையும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

பூஜைகளின் போது இச் சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், 'தாங்கள் இனிமேல் குடிப்பதில்லை; தவறான காரியங்களில் ஈடுபடுவதில்லை' என சத்தியம் செய்து கொடுக்கின்றனர். ஆனால், இம்மூடநம்பிக்கையின் முதலும், இறுதியுமான தாக்குதல் இலக்காக இருப்பவர்கள் பெண்களே. வயதானவர்களும், ஆதரவற்ற பெண்களும் முதல் குறியாகின்றனர்.

விஷயம் வெளி உலகுக்குத் தெரிய வர, இந்தேரியா எனும் மாந்திரீகனும் மற்றும் 12 பேரும் கொலைக் குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்ச்சிகள் மூலம் மாதர் நல இயக்கங்கள் அரசுக்கு எதிரான கடும் நிர்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளன. கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சாட்சி சொல்ல - பாதிக்கப்பட்ட பெண்கள் உட்பட - யாரும் தயாராயில்லை. பேட்டி காண செல்லும் நிருபர்களிடம் ஒரு வார்த்தையும் பேசுவதில்லை. மனைவியை - ஜிங்கிலி பென் - இழந்த சோமலாபாய் கூட 'கிராமத்தார் எனக்கு வேறொரு திருமணம் செய்து வைத்துவிடுவார்கள்' என்று தான் கூறுகின்றார்.

மேற்குவங்கம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் இத்தகைய ''சூனியக்காரிகளை''ப் படுகொலை செய்வது பற்றி பரவலான செய்திகள் அவ்வப்போது வருகின்றன. ''பேய்'' விரட்டுவது என்கிற பெயரில் அப்பாவிப் பெண்களை மாந்திரீகர்கள் கொலை செய்வது ஒருபுறம். மறுபுறம் மர்மமான முறையில் செத்துப்போகும் கிராமத்துப் பெண்களை இந்தமாதிரியான சூனியக்காரிகள்தான் கொன்றுவிட்டார்கள் என்று பழி சுமத்தி, கிராமத்துக்காரர்கள் - குறிப்பாக மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடிப் பெண்களைப் பொது இடங்களில் அடித்தே கொல்வது என்கிற காட்டுமிராண்டித்தனமும் அடிக்கடி நடக்கின்றது.

இந்த அளவுக்கு, மத்தியகால மூட பழக்க வழக்கங்களும், அறியாமையும் அச்சமும், பயமும் ஆதிவாசி சமூக மக்களிடம் வேரூன்றிப் போயுள்ளது.

அவர்களின் வாழ்க்கை முன்னேற பொருளாதார மாற்றங்கள் மட்டும் போறாது; கல்வியும், விஞ்ஞான, சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் அவர்கள் மத்தியில் பரப்ப கடுமையான, அடிப்படையான முயற்சிகள் தேவை. அப்பொழுதுதான், வரும் தலைமுறையிலாவது மாற்றத்தைக் காண இயலும் என்கின்றனர் சமூக அறிஞர்கள். ஆனால், அரசோ கைது செய்து, வழக்கு தொடர்ந்ததுடன் தனது கடமை முடிந்துவிட்டது போல கையை கட்டிக் கொண்டிருக்கிறது.

● ராஜன்

'சூன்யக்காரி' எனக் குற்றம் சாட்டப்பட்டு அடித்து கொல்லப்பட்ட ம.பி. - சல்கேதா கிராமத்தைச் சேர்ந்த சும்ளிபாய்.



படிப்பகம்

www.padippakam.com



# பெண் உயிருடன் எரிப்பு சாதிவெறிக் கொடுமை!

வேதாரண்யம், பஞ்சநதிக்குளம் மேற்கு என்ற கிராமத்தைச் சேர்ந்த சுப்பையாத் தேவர் மகள் அஞ்சம்மாள் (20) வேறு சாதியைச் சேர்ந்த வைத்தி மகன் ராஜேந்திரன் (22) இருவரும் இளம்காதலர்கள். வீட்டாரிடம் எதிர்ப்பு இருந்ததால் இருவரும் 16.11.92 அன்று ஊரைவிட்டுச் சென்று பட்டுக்கோட்டை அருகேயுள்ள மகிழங்கோட்டை என்ற கிராமத்திற்குச் சென்று தங்கினர். அஞ்சம்மாள் கர்ப்பிணியாகவும் ஆனாள். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சாதிவெறியர்கள் அகமுடையார் சங்கக் கூட்டத்தைக் கூட்டிப் பேசி 22.11.92 அன்று 34 பேர் மகிழங்கோட்டை கிராமத்திற்குச் சென்று காதலர்களை அடித்து இழுத்து வந்தனர். தற்கொலை செய்து கொள்ளக் கூடாது, ஊரைவிட்டு செல்லக் கூடாது, போலீசில் புகார் கொடுக்கக் கூடாது என்றெல்லாம் ராஜேந்திரனை மிரட்டி விட்டுவிட்டனர். ஆனால், அஞ்சம்மாளை நஞ்சு கொடுத்து கட்டிலில் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றது சாதிவெறிக் கும்பல். சுடுகாட்டில் அஞ்சம்மாளின் கழுத்தில் கயிறுகட்டி இருபுறமும் இழுத்து பலவாறாக சித்திரவதை செய்தனர். அஞ்சம்மாள் எவ்வளவோ மன்றாடியும் வெறியர்கள் விட்டு வைக்கவில்லை. இறுதியில் உயிருடனே மயக்கத்திலிருந்த அஞ்சம்மாளைக் கொளுத்தினர். இக்கொலை நடந்த மறுநாளே வாய்மேடு காவல் நிலையத்திற்கு தகவல் தரப்பட்டு திருத்துறைப்பூண்டி இசான் இன்ஸ்பெக்டர் பி.எஸ்.சுப்பையா விசாரணை நாடகம் ஆடினார். அஞ்சம்மாளின் தந்தை, தம்பி, சகோதரிகள் மற்றும் காதலன் இராசேந்திரன் உட்பட 19 பேரை மிரட்டி தற்கொலை என வாக்குமூலம் வாங்கியது, சதிகார போலீசு. தற்கொலை பற்றி அரசுக்கு தகவல் தராமல் எரித்துவிட்டதாக பொய் வழக்கு போட்டு 19 பேரையும் திருத்துறைப்பூண்டி நீதிமன்றத்தில் நிறுத்தியது. வழக்கை ஒப்புக்கு விசாரித்த நீதிபதியும் கண்மூடித்தனமாக 19 பேருக்கும் தலா 5- ரூபாய் அபராதம் போட்டு தீர்ப்பளித்தார். இக்கொலையில் முக்கிய பங்காற்றிய பி.கே.ராஜரத்தினம் (காங்.), பி.ஆர்.இளங்கோவன், தி.மு.கவைச் சேர்ந்த வீராச்சாமி, தாமோதரன், மற்றும் சிவசுப்பிரமணியன் ஆகியோர் தப்பித்து விட்டார்கள். வலது கம்யூனிஸ் கட்சியைச் சேர்ந்த சிவகுரு பாண்டியனும் இதில் உடந்தை. இது போன்ற சாதியக் கொடுமைகளை - கொலைகளைப் பற்றி பிற மாநிலங்களிலிருந்துதான் அடிக்கடி செய்தியாக கேட்டோம். தற்பொழுது நமது கண்களுக்கே எட்டியுள்ளது.

### சூதாட்ட கடைகளுக்கு எதிராக இளைஞர்கள் ஆவேசம்

மதுரை கோரிப்பாளையம் மார்க்கெட் பகுதியில் வீடியோ கேம்ஸ் (சூதாட்டக்) கடைகளை அரசியல் பெரும்புள்ளிகள், அதிகாரிகள் பின்னணியுடன் திறந்து நடத்தினர், சிலர். மாணவர்கள் பள்ளியை மறந்தும் இளைஞர்கள் வேலையை மறந்தும் ஒழுக்கச் சீரழிவுக்குள்ளாகவும், வெட்டிச் சண்டைகள் ஏற்படவும் பெண்களுக்கு பாதுகாப்புக் கெடவும் வாய்ப்புள்ளதால் இதனைக் கண்டித்து பகுதியிலுள்ள மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், நற்பணி இயக்கங்கள், அனைத்துக் கட்சிகள் - சங்கங்களும் இணைந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தனர். சூதாட்டக் கடைகளால் விளையும் தீங்குகளைப் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்து ஆதரவு திரட்டினர். போராட்டக்குழு அமைத்து அதன் சார்பாக கலெக்டர் அலுவலகம் முன்பு 10.11.92 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். மறுநாள் சூதாட்ட கடைகள் அகற்றப்பட்டதற்கு நன்றி தெரிவித்தும் தமிழகமெங்கும் உள்ள கடைகளை அகற்ற கோரியும் பொதுக்கூட்டம் போராட்டக்குழு சார்பாக நடத்தப்பட்டது. சூதாட்டக் கடை நடத்துவோர் போராட்டக் குழுவிற்கு 2 லட்சம் ரூபாய் தருகிறோம்; ஒதுங்கிக் கொள்ளுங்கள்; இல்லையெனில், பிணமாக்கி விடுவோமென ரௌடிகளை வைத்து மிரட்டியும் பகுதி இளைஞர்கள் துணிவுடன் போராடி சாதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### 'கியூ' போலீசின் அதிகார வெறி, அத்துமீறல்

ரசிய புரட்சி நாள் நவம்பர் 7-ஐ கம்யூனிசப் புரட்சியாளர்கள் விழாவாகக் கொண்டாடினர். பென்னாகரம் விவசாயிகள் விடுதலை முன்னணியினர் தட்டி, சுவரொட்டி, கட் அவுட் வாயிலாக நவம். 7-ம் நாளை பிரச்சாரம் செய்தனர். சுவரொட்டி ஒட்டிய பொழுது மோப்பம் பிடித்துவந்த 'கியூ' பிரிவு போலீசு மனோகரன், மணி ஆகியோரைக் கைது செய்து கொண்டு போனது. இருவரும் போலீசு நிலையம் வரை கைதைக் கண்டித்து முழக்கமிட்டுச் சென்றனர். பின்னர் மணியை விடுவித்துவிட்டு மனோகரை சட்டவிரோதமாக சிறைவைத்து 1 1/2 நாட்களுக்குப் பிறகே வழக்குப் பதிவு செய்து நீதிமன்றம் கொண்டு சென்றது, போலீசு. ஞாயிற்றுக் கிழமையன்று குடிபோதையிலிருந்த நீதிபதியோ மனோகரனை 15 நாட்கள் விசாரணைக் கைதியாக சேலம் சிறைக்கு அனுப்பி வைத்தார். சிறைக்குச் சென்றவர் கைதிகள் மத்தியில் தமது புரட்சிகர கருத்தைப் பரப்பவும் உரிமைக்கு குரல் கொடுக்கவும் செய்தார். 11-ந் தேதி மனோகரனை வி.வி.மு. பிணையில் எடுத்தது. மனோகரன் பகுதி போலீசு, நிலையத்திலிருந்தபோது இதுபோன்ற செயல்பாடுகளை விட்டுவிடுமாறு மிரட்டியும் அறிவுரை கூறியும் பலன் கிடைக்காமல் ஏமாந்தது. இதே போல் 'கியூ' போலீசு மனோகரனின் பெற்றோரை மிரட்டி பணியவைக்க முயன்றும் தோற்றுப் போனது.



### துணைவேந்தரின் அடாவடித்தனம் தொழிலாளி குடும்பம் வீதியில்!

பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் ஊழலிலும், முறைகேடுகளிலும், அடாவடித்தனத்திலும் பெயர் போனவர்கள். ஞானத்திறகுப் பிறகு தற்போதைய துணைவேந்தர் முத்துக்குமரனும் அப்படியே. நிர்வாகத்தின் முறைகேடுகளைத் தட்டிக்கேட்டார் என்பதற்காக ஓட்டுநராகப் பணிபுரியும் மனோகரனை 14.8.92 அன்று வேலைநீக்கம் செய்துள்ளார், அடாவடி முத்துக்குமரன். இவருக்கு பல்கலைக்கழக பி.ஆர்.ஒ., பதிவாளர் முதல் பலர் கையாட்கள். துணைவேந்தரின் குடும்பத்திற்கு பழங்கள் வாங்குவது போன்ற எடுபிடி வேலைகளுக்கும் சட்டவிரோதமாக பல்கலைக்கழக வாகனங்களைப் பயன்படுத்துவது அன்றாட நடவடிக்கை. வாகனங்களைப் பழுது பார்ப்பதில் உதிரி பாகங்கள் வாங்குவதில் தரம் குறைந்த தனியார் கம்பெனிகளுடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு கொள்ளையடிப்பதும் சாதாரணம். இவற்றைக் கண்டித்து எதிர்த்ததற்காக ஓட்டுனர் மனோகரனை பஸ் ஓட்டுநர் பணியிலிருந்து மாற்றி ஸ்பேர் ஓட்டுனராக நியமிப்பது, வேலை செய்ய மறுத்ததாக பொய்யாக அடிக்கடி மொமோ கொடுப்பது, அதிகாரியை தகாத முறையில் பேசியதாக பொய்க்குற்றம் சாட்டுவது என பலவகைகளில் பழிவாங்கினார், அடாவடி முத்துக்குமரன். இறுதியாக நிரந்தர பணிநீக்கமும் செய்யப்படவே இதனை எதிர்த்து மனோகரன் பலவழிகளில் போராடிவருகிறார். நீதிமன்றம், விசாரணை மன்றம், பல்கலைக்கழக ஆட்சிக்குழு, செனட் குழு, அரசு அதிகார வர்க்கம் எனப் பலவற்றை சந்தித்துப் போராடியும் நீதி கிடைக்காததால் 18.12.92 அன்று குடும்பத்தோடு பல்கலைக்கழகம் முன்பு பட்டினிப் போராட்டம் நடத்த உள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

### போராளிகளை வேட்டையாடும் போலீசு நாய்கள்!

ஆட்சியாளர்களின் மக்கள் விரோதக் கொள்கைகள், கறுப்புச் சட்டங்கள், ஊழல் - முறைகேடுகள் அனைத்தையும் போர்க்குணத்தோடு எதிர்த்து போராடி வரும் போராளிகள் அரசின் அடக்குமுறைக்குள்ளாவது வாடிக்கையாகிவிட்டது. அதுவும் 'தடாநாயகி' ஜெயலலிதா ஆட்சியில் சொல்லவே வேண்டாம். போலீசு கடந்த அக்டோபர் மாதம் ராதாகிருஷ்ணன், சிவராஜ் (ம.ஜ.இ.க) ஆகியோரை மதின்கோன்பாளையம் போலீசு கைது செய்து சட்டவிரோதமாக பல நாட்கள் மறைத்து வைத்தது. இதே போல் பென்னாகரம் ரயில் பாதை குண்டு வெடிப்புச் சம்பவத்தை சாக்கு வைத்துக் கொண்டு முற்போக்கு இளைஞர் அணியினரைக் கைது செய்தனர். இதன் தொடர்ச்சியாக நல்லம்பள்ளி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த கதிரவன் என்பவர் வீட்டில் சட்டவிரோதமாக ஆயுதம் தேடுதல் வேட்டை நடத்தியது 'கியூ' பிரிவு போலீசு. இதைக் கண்டித்து பு.மா.இ.மு. மேற்கொண்ட சுவரொட்டி இயக்கம் பகுதி மக்களிடையே போலீசின் முகத்திரையைக் கிழித்துக் காட்டியது. அரசின் அடக்குமுறை போராட்டங்களையும் போராளிகளையும் வளர்த்ததாகத்தான் வரலாறு!

### சூடுபட்ட வானரங்களின் காட்டுத் தர்பார்!

இந்து மதவெறி வானரக்கூட்டம் டிசம். 6-ந் தேதி 'கரசேவை' என அறிவித்திருந்ததால் அதன் விளைவை உணர்ந்த புரட்சிகர அமைப்புகள் நவம்பர் மாதம் முதலே பிரச்சார இயக்கம் மேற்கொண்டனர். பாளையம் வட்ட வி.வி.மு. சார்பாக ''பாபர் மசூதியை முஸ்லீம் மக்களிடமே ஒப்படை'' என்றும் ஆர்.எஸ்.எஸ். கும்பலை அம்பலப்படுத்தியும் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்ததை பரவலாக காணமுடிந்தது. சூடுபட்ட வானரக்கூட்டம் வி.வி.மு.க்காரர்களை தேடியலைந்தது. பல சவால் இடும் முழக்கங்களை எழுதி ஒட்டியது ஆர்.எஸ்.எஸ். கும்பல். கூடலூரில் தனியாக சுவரொட்டி ஒட்டிய வி.வி.மு.க்காரர் ராமையாவை உள்ளூர் அ.தி.மு.க. ரௌடிகளும் ஆர்.எஸ்.எஸ்.க்காரர்களும் சேர்ந்த 30 பேர் கொண்ட கும்பல் தாக்கி பொய்யாக புகார் கொடுத்து போலீசிடமும் ஒப்படைத்தது. கூடலூர் அ.தி.மு.க. இளைஞரணி செயலாளர் பொன் முருகேசனின் தம்பி பரமசிவம், லாரி ஆபீஸ் சுருளி, கூடல் ஒயின்ஸ் ஜீப்பின் டிரைவர் ராமர் ஆகியோரே தலைமை தாங்கி இத்தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. இதற்கிடையில் ராமையாவை ''மக்களை பிளவுபடுத்தி கலவரத்தைத் தூண்டினார்'' என்று பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைத்துள்ளது போலீசு. கீழ்கோர்ட்டிலும் செசன்சு கோர்ட்டிலும் பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் தற்போது உயர்நீதி மன்றத்தை வி.வி.மு. அனுகியுள்ளது. மதவெறிக் கும்பலையும், போலீசையும் அம்பலப்படுத்தி வி.வி.மு.வினர் இயக்கம் மேற்கொண்டு வருகின்றனர். ●

# சவடாலும் சவுக்கடியும்

*மக்கள் என்னைப் போகச் சொன்னால் தமிழகத்தை விட்டு நான் போய்விடுகிறேன்.*

*— சுப்ரமணியசாமி*

**திறந்த வீட்டுக்குள் புகுந்த நாய் மாதிரி வந்தவரை எப்படி வழியனுப்பி வைக்க வேண்டும் என்று தமிழக மக்களுக்குத் தெரியும்.**

''தி.மு.க. ஆட்சியில் ஆங்கில அகரவரிசை ஏ.பி.சி.டி.... தெரியாத ஆசிரியர்கள் பலர் நியமனம் பெற்றார்கள்'', ''மாணவர்கள் தேர்ச்சி விகிதம் குறைந்தால் ஆசிரியர்கள் தான் குற்றமுடையவர்கள்.''

*— பல பொது நிகழ்ச்சிகளில் தமிழக கல்வி அமைச்சர் அரங்கநாயகம்.*

**கஞ்சா அடிப்பவர் எல்லாம் கல்வித் துறைக்கு அமைச்சராக வந்தால் இப்படித் தான்!**

கட்சியின் உறுப்பினர்தான் என்று தெரிவதற்கு அவர்கள் பச்சைக் குத்திக் கொள்ளலாம் என்று ஒருவர் தெரிவித்த யோசனைக்கு கட்சியின் முக்கியத் தலைவர் இவ்வளவு உறுப்பினருக்கும் பச்சை குத்துபவர்களை எங்கே தேடுவது என்று ஆட்சேபம் தெரிவித்தார்.

*— காங். கட்சித் தேர்தலுக்காக போலி உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக எழுந்த கோஷ்டி தகராறு தொடர்பாக மாவட்டத் தலைவர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தினமணி, 23.11.92*

**பச்சை குத்துபவர்களுக்குத்தானே பஞ்சம். ஒன்று செய்யலாம். கைச் சின்னம் இருப்பது போல் முடியை விட்டு, தலையை மொட்டையடித்துக் கொள்ளலாம். மொட்டையடிக்க ஏராளமானோர் இருக்கிறார்கள்.**

அவசரப்பட்டு நடவடிக்கை எடுப்பது கவர்னர் மரபுக்கு ஏற்றதல்ல. அவர் ஒரு ஜனநாயகவாதி என்பதால் குறைகூறி விமர்சிப்பதை இரக்கத்துடன் விட்டுவிடுவார்.

*— சு.சாமி புகாருக்கு கவர்னர் செயல்படாதது குறித்து கவர்னர் அலுவலக அதிகாரி ஒருவர்.*

**ஓஹோ! ஜனநாயகத்தின் யோக்கியதையை இப்படியும் அம்பலப்படுத்தலாமே?!**

சொந்த காரணங்களுக்காக அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டாலும் அவரது இல்லத்தில் சொந்தப் பணிகளை மேற்கொண்டாலும் ஒவ்வொரு நிமிஷமும் அவர் பணியில் இருப்பதாகத்தான் பொருள்.

*— முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அடிக்கடி சங்கரமடத்திற்கு அரசு செலவில் பயணம் மேற்கொண்டது அரசின் மதச்சார்பின்மைக்கு எதிரானது என்றும் செலவான பணத்தை அவரிடம் அரசு வசூல் செய்ய வேண்டும் என்றும் பழனிபாபா தொடுத்திருந்த வழக்கை தள்ளுபடி செய்து வழங்கிய தீர்ப்பில் உயர்நீதிமன்ற நீதிபதி.*

**ஜனாதிபதி 'ஒன்று'க்கு போவதற்கும் அரசு இனாதம்தானா? வெட்கக்கேடு!**

மூப்பனார் அணியினர் கூறுவதுபோல் தனித்து காங்கிரசு ஆட்சி ஏற்படக்கூடிய நிலை தற்போது இல்லை. பாதயாத்திரை மூலம் ஆட்சியை பிடிக்க முடியும் என்றால் நான் கன்னியாகுமரியிலிருந்து உருண்டே வரத் தயார்.

*— வாழப்பாடி ராமமூர்த்தி.*

**ஏனெனில் ஜெயலலிதாவையே துதிபாடி சுற்றி சுற்றி உருண்டு வந்த பழக்கமிருக்கிறது!**

எனக்கு ஆண்டுக்கு 1 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. 15 லட்சம் கடன் பெற்றது பெரிய விசயமல்ல.

*— வெளிநாட்டு வங்கியில் சட்டவிரோதமாக கடன் பெற்றதாக பங்குப் பத்திர ஊழல் விவகாரத்தில் சிக்கிய இந்திய அட்டர்னி ஜெனரல் ஜி.ராமசாமி.*

**இந்தச் சட்டம் தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தவராயிற்றே அந்த பார்ப்பனத் திமிர்தான்!**

நமக்குள் இடதுசாரிகள் என நாம் அழைத்துக் கொள்ளலாம். ஆனால், அதே சமயம் தனியார் துறை முறையிலும் உள்ள நன்மைகளை கற்று தெரிந்து கொள்ளவேண்டும். இத்தகைய சிந்தனை நமது நாட்டிற்கு பெரிதும் உதவும்.

*— லண்டனில் நடந்த இந்திய - பிரிட்டன் சங்கத்தின் இரவு நேர விருந்தில் பேசிய ஜோதிபாசு.*

**நரகலில் நல்ல அரிசி பொறுக்கிய பழக்கமாகிவிட்டதே, அதுதான்!**

படிப்பகம்

www.padippakam.com

# மக்களுக்குச் சீரழிவு! அரசுக்கு வருமானம்!

## சாராயம், லாட்டரி சூதாட்டத்தைச் சார்ந்து நிற்கும் மாநில அரசுகளின் கேடுகெட்டத்தனம்

சமீபத்திய விவரங்கள் குடிப்பழக்கம் மிகப் பரவலாகவும் தீவிரமாகவும் ஆகிவருவதைக் காட்டுகின்றன. டெல்லி, பெங்களூர், திப்ருர்கார் மற்றும் ராஞ்சி ஆகிய நகரங்களில் எடுத்த புள்ளி விவரங்களின் ஆய்வுப்படி, 1960-ல் குடிப்பவர்கள் 300 பேரில் ஒருவர் முழு குடிகாரராக இருந்தார் என்பது 1980-ல் 26 பேரில் ஒருவர் என ஆயிற்று. இப்போதோ குடிப்பவர்கள் 10 பேரில் ஒருவர் முழுக்குடிகாரராக உள்ளார். குடிப்பவர்கள் நகரங்களில் ஐந்தில் ஒரு பங்கும் கிராமங்களில் இதற்கு இருமடங்குமாக இருக்கின்றனர். 1976-ல் இருந்ததைவிட மது உற்பத்தி 5 1/2 மடங்கு அதிகரித்துள்ளது. ஓயாது குடிக்கும் முழுக் குடிகாரர்களுக்கு சிகிச்சை மற்றும் சீர்திருத்தத்திற்கென்று தனிச்சிறப்பான மருத்துவ மனைகளும் தொடங்கப்பட்டுள்ளன.

மது வகைகளின் விற்பனையால் அரசுக்கு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் வருமானம் வருகிறது. ஆந்திர அரசுக்கு வருடம் ரூ. 860 கோடி ரூபாய், அந்நிய ரக இந்திய தயாரிப்பு மதுக்கள், சாராயம், கள்ளு ஆகியன மூலம் கிடைக்கிறது. தமிழக அரசு பிந்தைய இரண்டையும் அனுமதிக்கவில்லை எனினும் ஒயின் கடைகளை இருமடங்காக்கி, மது அருந்த இட வசதி (Bar) -க்கு தனிக்கட்டணம் விதித்து கிட்டத்தட்ட இதே அளவு வருவாயை தேற்றுகிறது.

இதே போன்று லாட்டரிகள் கணிசமான அளவு பெருத்துள்ளன. 1960-களின் இறுதியில் சி.பி.எம். கட்சி அரசாங்கம்தான் கேரளாவில் முதன்முதலாக லாட்டரி முறையை தொடங்கியது. இன்றோ கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களுமே லாட்டரி நடத்துகின்றன. மிகப்பெரியத் தொழில்களின் வரிசையில் இது இந்தியாவில் 7-வது இடத்தை லாட்டரிச்சீட்டு வகித்ததாக 87-ம் ஆண்டு புள்ளிவிவரம் கூறுகிறது. பல மாநில அரசுகளும் இதற்கென தனித்துறை வாரியங்களை ஒதுக்கியுள்ளன. லாட்டிரி சீட்டு வாங்குபவர்களில் 80 சதவீதத்தினர் மாதம் ரூ. 1,000-க்கும் குறைவான வருமானமுள்ளவர்களே. லாட்டரி மோகத்தில் நொடித்துப்போன குடும்பங்கள் தற்கொலை செய்து கொள்வது வழக்கமான செய்தியாகிவிட்டது.

இன்று மது விற்பனையும் பரிசுச் சீட்டு விற்பனையும் பெரும் செல்வம் கொழிக்கும் தொழில்களாக விளங்குகின்றன. அரசுக்கு மட்டுமல்ல, அரசை ஏமாற்றி பணம் சுருட்டுவோருக்கு பெருங்கொள்ளைக்கான தொழில்களாகவும் உள்ளன.

தமது ஆட்சியில் சாராயம், மது வகைகளின் விற்பனையைத் தொடரவும் லாட்டரி சூதாட்டத்தைத் தொடரவும் ஆளும் கட்சிகள் பல்வேறு வகைகளில் நியாயப்படுத்துகின்றன.

மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களுக்கான செலவுக்கு ஈடுகட்ட இத்தகைய வருவாய் அவசியமென கூறுகின்றனர். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டதிற்கான ரூ. 300 கோடிக்கு சாராய விற்பனையை சார்ந்திருப்பதாகக் கூறினார். கருணாநிதி அரசு, பண்ருட்டி விஷச் சாராயச் சாவுகள் மற்றும் குருடான சம்பவங்களைக் காட்டி மலிவு விலைச் சாராயத்தைக் கொணர்ந்தது. மதுவிலக்குக்காக மக்கள் போராடும்போது, கணிசமான பேருக்கு இத்தொழில் வேலை வாய்ப்பு அளித்துள்ளது, எனச் சொல்லி பிரச்சினையை கிடப்பில் போடுகின்றனர். லாட்டரி விற்பனையை "விழுந்தால் உனக்கு விழாவிட்டால் நாட்டுக்கு" எனச் சொல்லி வளர்ச்சி பணிகளுக்காக செலவிடப்படுவதாகக் கூறுகின்றனர்.

அரசின் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டே நிதிப் பற்றாக்குறைத் தன்மையை வரையறுக்க முடியும். மக்கள் விரோத நடவடிக்கைகளுக்காக போலீஸ், இராணுவம், நிர்வாகம் போன்றவற்றிற்கு கணிசமாக கொட்டியளக்கப்படுகிறது. அதிகாரி - மந்திரிகளின் ஊதாரித்தனமான ஆடம்பர செலவுகள்; பெரும் செல்வந்தர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் ஊழல் - மோசடிகளாலும் அரசுக்கு கணிசமான செலவு வருவாய் இழப்பு உள்ளது. எனவே நல்வாழ்வுத் திட்டங்களுக்கான தொகை சாராயம், லாட்டரியிலிருந்து வரவாகிறது என்பது மோசடியான கூற்றாகும்.

கணிசமானோருக்கு வேலைவாய்ப்பு அளித்திருக்கின்றன என்பதால் விலக்கிக் கொள்ள முடியாத துறைகள் என்பது இன்னொரு வகை ஏமாற்று ஆகும். சமுதாயத்தை சீரழிக்கவும், ஆக்கபூர்வமான முன்னேற்றத்திற்கும் கலாச்சாரத்திற்கும் தடையாகவும் உள்ள போதை பழக்கத்தையும் சூதாட்டத்தையும் ஒழிப்பதே மக்கள் நல்வாழ்வை பேணுவதாக இருக்கும். ஆக்கபூர்வமான முறையில் - தொழில்களில் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும்.

ஆனால், மக்களைச் சீரழிக்கும் சாராயக் கடைகளை எதிர்த்து இயக்கங்கள் நடத்தப்பட்டாலும் அவற்றை அரசு எப்பாடுபட்டாவது தடுக்கவும் சீர்குலைக்கவுமே முனைகிறது. ஆந்திராவில் இதற்கு இருவகைகளில் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. ஒன்று மார்க்சிஸ்டு - லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மக்கள் யுத்தக் குழுவினர் கரீம் நகர், வாரங்கல், அடிலபாத் மாவட்டங்களில் சாராயக் கடைகளை மூடவைத்தனர். போலீசு வேறு எங்கும் பாதுகாப்பு தர இயலாமல், போலீஸ் ஸ்டேசனில் வைத்தே சாராயம் விற்கவைத்தது. மக்கள் யுத்தக் குழுவிற்கு தடை விதிக்கப்பட்ட பிறகே மீண்டும் சாராயக் கடைகள் கிளம்பியுள்ளன.

நெல்லூர் மாவட்டத்தில், எழுத்தறிவுத் திட்டத்தில் கல்வி பயின்ற பெண்கள், பாடத் திட்டத்தில் உள்ள ஒரு பெண் சாராயத்திற்கு எதிராக போராடும் கதையைப் படித்து விழிப்புணர்வு பெற்று சாராயக் கடைகளை மூடும்- இயக்கத்தை நடத்தி வருகின்றனர். அகில இந்திய ரீதியில் பேசப் படும் அளவிற்கு இயக்கம் தீவிரமாகவும் பிரபலமாகவும் நடந்து வருகிறது. வேறு வழியின்றி எதிர்க் கட்சிகள் அனைத்தும் தற்போது இந்த இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. ஆந்திர கவர்னரே இதனை ஆதரித்துள்ளார். இந்த இயக்கத்தை வரவேற்று மது விலக்கை அமுல்படுத்த முன்வரவில்லை, விஜயபாஸ்கர ரெட்டியின் காங்கிரஸ் அரசாங்கம். எதிர்க் கட்சிகள் மற்றும் ஏலத்தில் தோற்ற கடைக்காரர்களின் தூண்டுதல் என்று பெண்களின் சாராய எதிர்ப்பு இயக்கத்தை பழி சுமத்துகிறார் ஆந்திர முதல்வர். மூலவித்தாக பாடத்திட்டத்தில் இருந்த சாராய எதிர்ப்புக் கதையை நீக்கி விட்டார்.

மக்களை ஏற்கனவே பல வழிகளிலும் ஒட்டச் சுரண்டி வரும் இன்றைய அரசுக்கு, தமது மக்கள் விரோத அடக்குமுறைக்கும் கொள்ளைக்கும், ஆளும் வர்க்கங்களின் சேவைக்கும் கூடுதல் நிதி தேவைப்படுகிறது. இனியும் வழக்கமான முறைகளில் வரி போட்டாலும் நிதியை தேற்ற இயலாது என உணர்ந்த ஆளுங்கும்பல் சமூகத்தை சீரழிக்கும் துறைகளை ஊக்குவித்து வளர்க்கிறது. மாடு இன்னும் கறக்கவில்லையே என்ற ஆத்திரத்தில் மடியை அறுத்து பால் எடுக்க முனையும் கூட்டமாக சீரழிந்து நிற்கிறது.

● உதயணன்

லாட்டரி சீட்டு விற்று பிழைக்கும் பார்வையற்றோர்; அரசே குற்றவாளி!



படிப்பகம்

www.padippakam.com

# எதிர்ப்பு வெள்ளத்தில் தத்தளிக்கும் யேல்ட்சின்

**ஆட்சிக் கலைப்பு அபாயம் எனும் புதிய அரசியல் நெருக்கடி ரஷிய அதிபர் யேல்ட்சினை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. பேரங்கள் - சமரசங்களால் தற்காலிகமாக ஓய்ந்துள்ள நெருக்கடிகள் மீண்டும் ஒரு புயலாகக் கிளம்பும் அபாயமே நீடிக்கிறது.**

வளர்த்த கடா மார்பிலே பாய்கிறது. ரஷிய அதிபர் யேல்ட்சின் யாரை ஆதரித்து ஊட்டி வளர்த்தாரோ, அதே முதலாளித்துவ 'சீர்திருத்தவாதிகள்' இன்று அவருக்கு எதிராகத் திரும்பி அச்சுறுத்துகிறார்கள். சோவியத் ஒன்றியம் சிதைந்த பிறகு, ரஷியாவில் இரண்டாவது புரட்சி தொடங்கிவிட்டதாகக் கூறிக் கொண்டு, முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத் திட்டங்கள் எனும் மண்குதிரை மீதேறி திக்விஜயம் புறப்பட்டார் அதிபர் யேல்ட்சின். ஆட்சிக்கு வந்த ஓராண்டிற்குள் அவரது கொள்கைகளும் திட்டங்களும் படு பாதாளத்தில் வீழ்ந்துள்ளதோடு எதிர்ப்பு வெள்ளத்தில் மூழ்கி இன்று யேல்ட்சின் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்.

கடந்த டிசம்பர் 1-ந் தேதியிலிருந்து 15-ந் தேதி வரை நடைபெற்ற ருஷ்ய நாடாளுமன்றக் கூட்டத்தின் போது, எதிர்த்தரப்பினர் யேல்ட்சினின் கண்ணில் விரலை விட்டு ஆட்டி மிரட்டினர். அதிபரா? நாடாளுமன்றமா? யாருக்கு அதிகாரம் என்பதற்கான பலப்பரீட்சையில் அதிபர் யேல்ட்சின் திக்குமுக்காடிப் போனார். நாடாளுமன்றம் அரசைக் கட்டுப்படுத்துவதா அல்லது அதிபர் கையில் அதிகாரத்தைக் குவித்து அரசை இயக்குவதா என்பதே தற்போதைய அதிகாரப் போட்டியின் மையப் பிரச்சினையாக இருக்கிறது. ''நாடாளுமன்றத்தைக் கலந்தாலோசிக்காமல் அதிபர் யேல்ட்சின் தன்னிச்சையாக மந்திரிகளையும் மந்திரி சபைகளையும் நியமிப்பது அல்லது நீக்குவதாகச் செயல்படுகிறார். நாளொரு சட்டமும் பொழுதொரு உத்திரவுமாக அவர் வரைமுறையற்ற சர்வாதிகார சதிராட்டம் போடுகிறார். யேல்ட்சின் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. அதிபரின் அதிகாரங்களைக் குறைக்க புதிய சட்டத் திருத்தம் தேவை'' என்கின்றனர் எதிர்த்தரப்பினர்.

அதிபர் யேல்ட்சினோ, ''இத்தகைய நாடாளுமன்றத்துடன் என்னால் இயங்க முடியாது. பழமைவாதிகளின் கூடாரமாக நாடாளுமன்றம் மாறிவிட்டது. எனக்கு எதிராக அவர்கள் ரகசிய ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறங்கியுள்ளார்கள்'' என்று எதிர்க்குற்றம் சாட்டுகிறார்.

எதிர்த்தரப்பினரின் பலத்தைக் கண்டு பீதியடைந்த அவர், ''நான் மக்களிடம் நேரடியாக கருத்துக் கணிப்பு நடத்த விரும்புகிறேன்; மக்கள் என்னையும் எனது அரசையும் ஆதரிக்கிறார்களா அல்லது நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை மீது நம்பிக்கை வைக்கிறார்களா என்பதை மக்களிடமே கேட்கப் போகிறேன். மக்களின் தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன்'' என்று புலம்பினார்.

தற்போதைய அதிகாரப் போட்டியில் ஒரு வேடிக்கை என்னவென்றால், யேல்ட்சின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரே தவிர அவருக்கென தனிக் கட்சி எதுவும் கிடையாது. தற்போதைய புதிய சட்டப்படி, ஒரு அரசியல் கட்சியின் தலைவராகவோ, உறுப்பினராகவோ, அதைச் சார்ந்தவராகவோ அதிபர் இருக்கக் கூடாது. அரசியல் கட்சிகள் வேண்டுமானால் அவரை ஆதரிக்கலாம். கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒருவரை, மக்கள் நேரடி வாக்களிப்பின் மூலம் அதிபராகத் தேர்வு செய்ய வேண்டும். அரசாங்கத்தின் மீது போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தை உடைக்க அதிபர் யேல்ட்சின் இப்படியொரு வினோதமான சட்டத்தைக் கொண்டுவந்தார். இன்று இச்சட்டமே அவரை ஆதரவற்ற அரசியல் அனாதையாக்கிவிட்டது.

எனவே எதிர்த் தரப்பினரைச் சமாளிக்க, முன்னாள் அரசுச் செயலர் கென்னடி போர்புலிஸ் மூலம் புதிய கட்சி ஒன்றைத் தொடங்க யேல்ட்சின் இரு மாதங்களுக்கு முன்பு முயற்சித்தார். ஆகஸ்ட் 1991 ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின்போது - அதாவது யேல்ட்சின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிது காலத்திற்குள் இப்படியொரு கட்சி துவங்கியிருந்தால் ஓரளவுக்கு ஆதரவு கிடைத்திருக்கும். ஆனால், இன்று பெருகிவரும் பொருளாதார நெருக்கடிகளால், மக்களிடம் செல்லாக் காசாகிவிட்ட யேல்ட்சின் தனது பினாமிகள் மூலம் புதிய கட்சி துவங்கினால் அதைத் தெருநாய்கூட மதிக்காது. இதனால் இந்த முயற்சியையும் வேறு வழியின்றி யேல்ட்சின் கைவிட்டு விட்டார்.



இன்று ரஷ்யாவில் 30-க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளும், குழுக்களும் அரசியல் நீரோட்டத்தில் உள்ளன. ஆனால், எந்தக் கட்சியுமே நாடு தழுவிய அளவில் செல்வாக்கு பெற்றவை அல்ல. அதிபரை பல கட்சிகளும் குழுக்களும் ஆதரித்தாலும் அவை அளவில் சிறியவையாகவும் பிளவுபட்டும் கிடக்கின்றன. இதிலே சற்று பெரிய கட்சியாக இருந்த ருஷ்ய ஜனநாயகக் கட்சியானது இப்போது எதிர்த்தரப்பில் சேர்ந்து விட்டது. யேல்ட்சினை ஆதரித்து வந்த ஜனநாயகத்துக்கான ரஷ்ய இயக்கக் கட்சியானது பல கூறுகளாக உடைந்துவிட்டது.

முன்னாள் போலிக் கம்யூனிஸ்ட் கட்சியானது 6-க்கும் மேற்பட்ட குழுக்களாக உள்ளது. தற்போது இந்தக் குழுக்களும், தேசியவாதக் கட்சிகளும் கூட்டணி சேர்ந்து யேல்ட்சினுக்கு எதிராக தேசிய புணர்நிர்மான முன்னணி என்ற அமைப்பை நிறுவியுள்ளன. அண்மையில் 'கம்யூனிஸ்ட்' கட்சி மீது தடைவிதித்து அதன் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய யேல்ட்சின் எடுத்த முயற்சிக்கு ரஷ்ய உயர்நீதி மன்றம் சட்டபூர்வ அங்கீகாரம் தர மறுத்துவிட்டது. இது யேல்ட்சினுக்கு ஏற்பட்ட பெரிய அடி என்றும், இதனால் முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகள் புதிய பலம் பெற்றுள்ளதாகவும் அரசியல் பார்வையாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, ருஷ்ய ஆலை நிர்வாகிக்ள் இன்று யேல்ட்சினுக்கு பெரும் சவாலாக வளர்ந்து அச்சுறுத்துகின்றனர். முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத் திட்டப்படி அதிபர் யேல்ட்சின் அரசுத் துறை ஆலைகளுக்கான முதலீட்டை பெருமளவில் குறைத்துவிட்டார். இதனால் வருமாண்டில் தொழிற்துறை உற்பத்தி 50%-க்கு மேல் குறைந்துவிடும். இதைக் காரணம் காட்டி இந்த ஆலைகள் தனியாருக்குத் தாரைவார்க்கப்படும். இதனால் ஆலை நிர்வாகிகளும் லட்சக்கணக்கான தொழிலாளர்களும் வேலை இழப்பர். எனவே, தமது வேலையையும், பதவியையும் தக்கவைத்துக் கொள்ள, கணிசமான அளவுக்கு தொழிலாளர்களைச் சேர்த்துக் கொண்டு புதிய சங்கம் அமைத்து ஆலை நிர்வாகிகள் அரசியலில் தலையிடத் தொடங்கியுள்ளனர். இவர்கள் ருஷ்ய சுதந்திரக் கட்சி, ருஷ்ய தேசிய ஜனநாயகக் கட்சி ஆகியவற்றுடன் சேர்ந்து குடிமக்கள் சங்கம் (Civic Union) எனும் பெரிய அரசியல் சக்தியாக வளர்ந்துள்ளனர். ருஷ்ய நாடாளுமன்றத்திலும் யேல்ட்சினுக்கு எதிரான இந்தக் கூட்டணியே செல்வாக்குடன் உள்ளது.

டிசம்பரில் நாடாளுமன்றம் கூடியதும், எதிர்த்தரப்பினர் ஒன்று சேர்ந்து யேல்ட்சின் மீது பகிரங்க குற்றம் சாட்டும் தீர்மானத்தையும், அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், அதிபரின் அதிகா

www.padippakam.com

ரங்களைக் குறைப்பதற்கான சட்டத் திருத்தத்தையும், யேல்ட்சின் தற்காலிக நியமனம் செய்த பிரதமரை நீக்கிவிட்டு புதிய பிரதமரை தங்கள் விருப்பப்படி தேர்ந்தெடுக்கவும் தீர்மானங்களைக் கொண்டு வந்தனர். 1,024 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகள், தேசிய - தாராளவாத ஜனநாயகவாதிகள், மையவாதிகளைக் கொண்ட எதிர்த்தரப்பினரின் பலம் 600 - 700 பேராக இருந்தது. எதிர்த்தரப்பினரைச் சமாளிக்க தமக்கு விசுவாசமான சபாநாயகர் காஸ்புலடோவை யேல்ட்சின் பெரிதும் நம்பியிருந்தார். ஆனால், அவரோ கடைசி நேரத்தில் காலை வாரிவிட்டு எதிர்த்தரப்பினருடன் சேர்ந்து கொண்டு யேல்ட்சினை பகிரங்கமாக விமர்சிக்கத் தொடங்கினார்.

தற்போது நடைபெற்ற ருஷ்ய நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், இந்திய நாடாளுமன்றக் கலாச்சாரத்தையே விஞ்சும் வகையில் கூச்சலும் குழப்பமும் ரௌடித்தனமும் அரங்கேறியது. ஒரு பிரிவினர் நாடா



யேல்ட்சினுக்கு எதிராக நவம்பர் 7-ல் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் பேரணி; ஸ்டாலின் படத்துடன் ஒரு பெண்மணி.

ளுமன்ற மையப் பகுதியில் நின்று கோஷமிட்டனர். மற்றொரு பிரிவினர் சபாநாயகரை நையப்புடைத்து ஊளையிட்டனர். இன்னும் சிலர் ஆத்திரத்தில் மேசையைக் குத்தி சேதப்படுத்தினர். யேல்ட்சின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்ட சபாநாயகர் 'ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அவையை விட்டு அலறிக் கொண்டே ஓடினார். அதிபர் யேல்ட்சினோ அதிர்ச்சியினால் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் யேல்ட்சினுக்கு தோல்வி என்றால் அது அவரது கொள்கைக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்பட்ட பெருந்தோல்வியை நிரூபிப்பதாகிவிடும். நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பினர் வெற்றி பெற்றால், யேல்ட்சினின் எந்தவொரு சட்டமும் கொள்கையும் நிறைவேறாமல் அரசே செயலிழந்து விடும்.

எனவே, யேல்ட்சின் அவசர அவசரமாக ரகசிய பேரங்களை நடத்தி எதிர்த்தரப்பினருடன் தற்காலிக சமரசத்துக்கு முன்வந்தார்.

இதன்படி, தான் பிரதமராக நியமித்த யேகார் கைதாரை விலக்கிக் கொண்டு, எதிர்த்தரப்பினர் முன்னிறுத்திய செர்னோமித்ரின் என்பவரை பிரதமராக்க ஒப்புக் கொண்டார். மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப் போவதாக கூறியதைச் செயல்படுத்த மாட்டேன் என்றார். எதிர்த்தரப்பினரின் ஆலோசனைப்படி, 1993 ஏப்ரலில் அதிபரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டத்திற்கான உருவரைகளை அங்கீகரிக்க மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்த ஒப்புக் கொண்டார். மறுபுறம், எதிர்த்தரப்பினர் யேல்ட்சின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டனர். நாடாளுமன்ற, நிர்வாக, நீதித்துறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரமுடைய சுப்ரீம் சோவியத் எனும் நாடாளுமன்ற உயர்மட்டக் குழுவைக் கலைக்கவும் ஒப்புக் கொண்டனர். இரு தரப்பும் ஒப்புக் கொண்ட இந்த சமரசத்தால் தற்காலிகமாக மோதல் தணிந்துள்ளது. ஆனால், அடுத்த சுற்றில் அது பூகம்பமாய் வெடிக்கும் அபாயமே நிலவுகிறது.

ஏனெனில், ரஷ்யாவின் இரும்பு மனிதராக வர்ணிக்கப்படும் அதிபர் யேல்ட்சினுக்கு இன்று எந்தப் பக்கம் திரும்பினாலும் நெருக்கடிகள். ஒருபுறம் விலைவாசி ஏற்றம், 2,000%க்கும் மேலான பணவீக்கம், உணவுப் பொருள் தட்டுப்பாடு, உற்பத்தித் தேக்கம் முதலான பொருளாதார நெருக்கடிகள்; மறுபுறம் மேலை ஏகாதிபத்தியங்களின் கழுத்தறுப்புகள், நிர்பந்தங்களால் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத் திட்டங்கள் போதிய நிதி ஆதாரமின்றி இழுபறியில் கிடப்பதால் ஏற்படும் நெருக்கடிகள்; விபச்சாரம், போதை மருந்து, மாஃபியா, கடத்தல் முதலான முதலாளித்துவச் சீரழிவுகளால் ஏற்படும் சமூக நெருக்கடிகள்; ருஷ்ய பெருந்தேசிய இனத்திற்கும் இதர சிறிய தேசிய இனங்களுக்கிடையிலான தீராத உள்நாட்டுப் போரினால் எழும் நெருக்கடிகள்; இத்தனையும் போதாதென்று ருஷ்ய நாடாளுமன்றத்திலேயே யேல்ட்சினுக்கு எதிர்ப்பு தீவிரமாகி அதிகாரப் போட்டியினால் எழும் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயம் எனும் புதிய அரசியல் நெருக்கடி என பலமுனைத் தாக்குதல்களால் யேல்ட்சினின் அந்திமக்காலம் நெருங்கிவிட்டது. பத்திரிகைகளின் கருத்துக் கணிப்புப்படி அவரது செல்வாக்கும் மங்கி வருகிறது. அவரால் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி முன்னேறவும் முடியவில்லை. 'சீர்திருத்த' வாதிகளின் அச்சுறுத்தலால் பின்வாங்கவும் முடியவில்லை. இத்தகைய திரிசங்கு நிலையிலிருந்து கொண்டு அவரால் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் முடியவில்லை. வேறென்ன செய்வது? முதலாளித்துவத்தை முற்றாக நிறுவ முனைந்தார்கள்; அது பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாகிவிட்டது.

● மனோகரன்

# மராட்டியத்தை ஆட்டுவிக்கும் மாஃபியா எம்.எல்.ஏக்கள்!

அன்று, தெருவில் கூவி விற்கும் சிறு வியாபாரியாக இருந்தவர், இன்று மகாராஷ்டிராவில் தானே மாவட்டத்தைத் தனது கட்டை விரலின் அடியில் வைத்திருக்கும் அளவுக்கு மாபெரும் கோடீசுவரராக முடியுமா? நேற்று, கள்ளச் சாராய வியாபாரம் செய்தவர், இன்று எம்.எல்.ஏ.வாக முடியுமா? முடியும்! கேலிக்கூத்தான இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நிச்சயமாக முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார், உலாஸ் நகர் தொகுதி காங்கிரசு எம்.எல்.ஏ.வான சுரேஷ் பப்பு கலானி. பணபலமும் குண்டர் பலமும் கொண்ட மாஃபியா தலைவராக கொட்டமடிக்கும் கலானி, கடந்த அக்டோபர் மாத இறுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ('தடா') கைது செய்யப்பட்ட முதல் எம்.எல்.ஏ. என்ற பெருமையையும் தட்டிச் சென்றுள்ளார்.

1980-களின் துவக்கத்தில் சிறு வியாபாரியாக உலாஸ் நகர் வட்டாரத்தில் பிழைத்து வந்த கலானி, பின்னர் கள்ளச் சாராய வியாபாரத்தில் இறங்கினார். அதன் பிறகு போலி லேபிள் ஒட்டி பிராந்தி, விஸ்கி போன்ற மேலைநாட்டு வகை உயர்ரக மது என்று கள்ளத் தனமாக விற்பனை செய்யத் தொடங்கினார். தொழிலைப் பாதுகாக்க கூடவே குண்டர் படையையும் கட்டியமைத்துக் கொண்டார். கள்ளச் சாராய வியாபாரத்தின் மூலம் கோடிக்கணக்கில் பணம் புரளத் தொடங்கியதும், உலாஸ் நகரையே ஆட்டிப் படைக்கும் கிரிமினல் குற்றங்களையே தொழிலாகக் கொண்ட மாஃபியா கும்பலின் தலைவராக கலானி உயர்ந்தார். தன் மீது சட்டபூர்வ நடவடிக்கை ஏதும் வராமலிருக்க காங்கிரசு கட்சியில் சேர்ந்தார். அப்போது உலாஸ் நகர் மற்றும் தானே மாவட்டப் பகுதியில் சிவசேனா பலமாக இருந்தது. அதை முறியடித்து தேர்தல் வெற்றியைப் பெற கலானி போன்ற மாஃபியா தலைவர்களின் தயவு காங்கிரசுக்கு அவசியமாகவும் இருந்தது.

அதன்படி கலானி உலாஸ் நகர் காங்கிரசு வேட்பாளராக நிறுத்தப்பட்டு, பணபலம், குண்டர் பலத்தைக் கொண்டு தேர்தலில் வெற்றிபெற்று எம்.எல்.ஏ.வானார், கட்சியின் தேர்தல் செலவுகளுக்காக கோடிக்கணக்கில் கலானி அள்ளிக் கொடுத்ததோடு, தனது பொறுப்பில் 5 எம்.எல்.ஏ.க்களின் தேர்தல் செலவுகளையும் கவனித்துக் கொண்டார். குறிப்பாக, மஹாராஷ்டிர முன்

படிப்பகம்

www.padippakam.com

னாள் முதல்வரும், இன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான சரத்பவார், காங்கிரசின் புதிய கோஷ்டித் தலைவராக உயர்ந்த போது, அவரது நம்பகமான கூட்டாளியாகச் செயல்பட்ட கலானியின் கொட்டம் எல்லை மீறிப் போனது. போட்டி மாஃபியா குழுக்களுடன் கலானியின் மாஃபியா கும்பல் நடத்தும் பகிரங்க தெருப்போர்களாலும், கொலைகளாலும் உலாஸ் நகர் வட்டாரமே பயபீதியில் உறைந்து போனது.

அண்மைக்காலமாக, கிரிமினல் மாஃபியாக்களும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளும் தாம் கொள்ளையடித்த பணத்தை கட்டிடத் தொழில் - ரியல் எஸ்டேட் தொழிலில் முதலீடு செய்து கொழுத்த லாபமீட்டி வருகின்றனர். விதிமுறைகளை மீறி அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டுவது, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பது, குடியிருப்போரை குண்டர்களைக் கொண்டு விரட்டியடித்து பழைய கட்டிடங்களை மாற்றுவது என்பதாக மாஃபியாக்களின் 'ரியல் எஸ்டேட்' தொழில் வேர்விட்டுப் பரவிவருகிறது. பம்பாயில் பிரபல கள்ளக் கடத்தல் - மாஃபியா பேர்வழிகளான மஸ்தான், தாவூத் இப்ராஹிம் முதலானோர் இத்தொழிலில் இன்று முடிசூடா மன்னர்களாக உள்ளனர். பல கொலை வழக்குகளில் சிக்கிய தாவூத் இப்ராஹிம் இந்தியாவிலிருந்து தப்பியோடி இப்போது துபாயில் தங்கியுள்ளான். அங்கிருந்து கொண்டு பம்பாயிலுள்ள தனது மாஃபியா கும்பலை இயக்கி வருகிறான்.

தாவூத் இப்ராஹிமின் நம்பகமான கூட்டாளிகளில் ஒருவர்தான் கலானி. அவர் எம்,எல்.ஏ வாகத் தேர்தெடுக்கப்பட்ட பிறகு 'ரியல் எஸ்டேட்' மாஃபியா தலைவராக வளர்ந்தார். உலாஸ் நகரை தனி முனிசிபல் கவுன்சிலாக மாற்றி அதன் தலைவராகவும் கலானி மாறிய பிறகு, சட்டவிரோதமான அடுக்குமாடிக் கட்டிடங்களால் உலாஸ் நகர் உயர்ந்தது. பள்ளிகள், மருத்துவமனை, நூலகம், பூங்கா முதலானவற்றுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் கலானி கும்பலால் ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்டது. புறம்போக்கு நிலங்களில் காலங்காலமாக குடியிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் விரட்டியடிக்கப்பட்டு, அப்பகுதியில் கலானியின் 'சீமா' சுற்றுலாத்தலம் கட்டப்பட்டது. தனது ரகசிய உலக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க மறுத்த உலாஸ் நகர முனிசிபல் கமிஷனர் ஓய்.சி.பவார் என்பவரை உடனடியாக இடமாற்றம் செய்து விரட்டியடித்தார், கலானி. அதேசமயம் தனக்கு உறுதுணையாகச் செயல்பட்ட தானே மாவட்டப் போலீசு உயரதிகாரிகளுக்கு 25 லட்ச ரூபாய் செலவிட்டு அவர்களது வீடுகளைப் புதுப்பித்துக் கொடுத்தார்.

மிகப் பெரிய மாஃபியா - அரசியல் தலைவராக கலானி உயரத் தொடங்கியதும் அரசியலில் மட்டுமின்றி, கிரிமினல் தொழிலிலும் போட்டியாளர்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. தனக்குப் போட்டியாக வளர்ந்துவிட்ட கலானியைப் பழிவாங்க அவரது தாய்மாமனை கோபால் ராஜ்வாணி கும்பல் சுட்டு கொன்றது. ஆத்திரமடைந்த கலானி கும்பல், ராஜ்வாணியின் நெருங்கிய கூட்டாளியான பட்டிஜாவையும். அவனது சகோதரனையும் பட்டப்பகலில் பம்பாய் வீதியில் சுட்டுக் கொன்றது. அதைத் தொடர்ந்து பம்பாய் உயர்நீதி மன்றத்தில் கோபால் ராஜ்வாணியை கலானி கும்பல் சுட்டு, மயிரிழையில் ராஜ்வாணி தப்பினான். அண்மையில் பம்பாயின் பிரபல ஜே.ஜே. மருத்துவமனையில் ராஜ்வாணியின் முக்கிய கூட்டாளி கலானி கோஷ்டியால் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டான். இது தவிர தமக்கு உடந்தையாகச் செயல்பட மறுத்த பல போலீசாரும் மர்மமான முறையில் கலானி கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.



தடாவில் கைதான காங்கிரசு எம்.எல்.ஏ. கலானி; உலாஸ்நகர் மாஃபியா குண்டர்படைத் தலைவன்

கபிரியேல் எனப்படும் கிரிமினல் பேர்வழியை பம்பாய் போலீசார் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் வேறொரு வழக்கில் கைது செய்தனர். அப்போது அவன் போலீசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில், தான் ஈராண்டுகளுக்கும் மேலாக கலானியிடம் பணியாற்றி வருவதாகவும், இதுவரை 6 கொலைகளைச் செய்துள்ளதாகவும், ஒவ்வொரு கொலைக்கும் ரூ 20,000 முதல் ரூ 50,000 வரை போனசாகப் பெற்றுள்ளதாகவும் ஒப்புக் கொண்டுள்ளான். ஆனாலும் பம்பாய் போலீசார் கலானி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நேற்றுவரை, ஏ.கே.47 ரக துப்பாக்கி ஏந்திய அடியாட்கள் புடைசூழ உலாஸ் நகர் வட்டாரத்தையே ஆட்டிப் படைத்த கலானி இப்போது 'தடா' சட்டத்தின் கீழ் கைதாகியுள்ளார். இவரைப் போலவே விரார் தொகுதியில் எம்.எல்.ஏ.-வான ஹிதேந்திர தாக்கூரும் 'தடா' வில் கைது செய்யப்பட்டுள்ளார். கலானியைப் போலவே, தானே மாவட்டத்தைத் தன் கைப்பிடியில் வைத்துக் கொண்டு கொட்டமடித்த இன்னொரு 'ரியல் எஸ்டேட்' மாஃபியா கும்பலின் தலைவர்தான் ஹிதேந்திர தாக்கூர். பம்பாயின் பயாந்தர் முதல் தாணு வரையிலுள்ள கடற்கரையோர மீனவக் குடியிருப்புகளையும், ஆதிவாசிகளையும் அடித்து வெளியேற்றிவிட்டு அப்பகுதியில் அடுக்குமாடி கட்டிடங்களையும், சுற்றுலா ஓட்டல்களையும் தாக்கூர் கும்பல் கட்டியுள்ளது. இதற்காக, தாக்கூரின் அடியாட்கள் வதராய் கிராம ஆதிவாசிகளின் குடிசைகளைக் கொளுத்தியதோடு, எதிர்த்தவர்களின் கை - கால்களையும் வெட்டி முறித்துள்ளனர். இத்தனை அட்டூழியங்கள் நடந்த போதிலும், நேற்றுவரை இவர்கள் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்திய நாடாளுமன்ற அரசியல் கிரிமினல் மயமாகிவிட்டதற்கு அண்மைக்கால உதாரணங்கள்தான் கலானியும் தாக்கூரும். இவர்களது கைது நடவடிக்கைக்குக் காரணமே இவர்கள் சரத்பவார் கோஷ்டியில் இருந்ததுதான். பிரதமர் நரசிம்மாராவுடன் அதிகாரப் போட்டியில் ரகசியமாக இறங்கியுள்ள சரத்பவார் கோஷ்டியை முடமாக்கவே தற்போது இவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இவர்களது குண்டர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை. நாடாளுமன்ற அரசியல் கிரிமினல் மயமாகிப் புரையோடிவிட்ட நிலையில் காங்கிரசு கட்சிக்குள்ளேயே ஒரு கோஷ்டியை அடக்க மற்றொரு கோஷ்டி 'தடா' சட்டத்தை ஏவுமளவுக்கு நிலைமை முன்னேறியிருக்கிறது. கடந்த அக்டோபர் துவக்கத்தில் குஜராத் மாநில காங்கிரசுக் கட்சிச் செயலாளரான ரவூப் வலியுல்லா மாஃபியா கும்பலால் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். காங்கிரசிலுள்ள ஒரு கோஷ்டியினர் மற்றொரு கோஷ்டியினரை அடக்கவும் அழித்தொழிக்கவும் மாஃபியா கும்பலை ஏவிவிடுமளவுக்கு குஜராத்தில் கிரிமினல் அரசியல் தீவிரமடைந்துள்ளது. இந்த லட்சணத்தில் அரசியலைக் கிரிமினல் மயமாக்குவதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ராவ் பேசியுள்ளார். கிரிமினல் அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ; எம்.பி.க்களை 'தடா'வில் கைது செய்ய வேண்டியிருக்கும். சந்தேகமிருந்தால் பாசிச ஜெயாவின் ஆசி பெற்ற அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களிடம் விசாரித்துப் பாருங்கள்.

● குமார்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா




நாடெங்கும் மதவெறியவர்கள் மூட்டிய தீயில் மனிதர்கள் எரிந்து கருகும் பிணவாடை இன்னமும் அடிக்கிறது. ஆனால், அதைப் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை என்று தின்று கொழுத்த ஒரு கூட்டம் வழக்கம்போல மார்கழிப் பனிக்கு இதமாக பஜனை (இசை விழா) நடத்திக் கொண்டிருக்கிறது.

மதவெறிபோதை ஏறிய போலீசு நாய்களால் சுட்டு தள்ளப்பட்ட பெரியவர், இதோ இப்பெண்ணின் உறவினரா, தந்தையா, சகோதரரா, பழக்கமுள்ள சுற்றத்தாரா தெரியாது. ஆனால், அவரைக் கவனிக்கும் அவகாசம் கூட இந்த இளம் பெண்ணுக்கு இல்லை. இவளின் முகத்திலே தெரியும் பீதி - கலவரம், சோகம் துயரம் எல்லாவற்றுக்கும் மேலாக மதவெறியர்கள் வைத்த தீயை அணைக்க ஒரு வாளித் தண்ணீருடன் ஓடும் துணிவு ஆகியவற்றை பண்ணிப் பாருங்கள். அயோத்தியில் ராமனின் பெயரால் அனுமார்கள் புரிந்த அராஜகத்தைத் தொடர்ந்து ஐந்தே நாட்களில் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கானோர்களை மதவெறி காவு கொண்டது. கிழக்கே அசாமின் - நவ்காங் தொடங்கி மேற்கே குஜராத் - சூரத்திலும், பம்பாய் - தாராவி ஜோகேஸ்வரியிலும் நூற்றுக்கணக்கானோர் உயிரோடு கொளுத்தப்பட்டனர். இந்து மதவெறி காமவெறியாக மாறியபோது பல பெண்களையும் நிர்வாணமாக்கி தெருக்களில் அப்படியே ஓட விட்டும் "வீடியோ" படம் பிடித்தார்கள்.

சுயமரியாதையும் மனித உணர்வும் உள்ளவர்கள் அவமான வேதனை ஆத்திரத்தில் துடித்திட வேண்டும்.

ஆனால், எல்லாவற்றையும் உதறிவிட்ட கும்பல் வெட்கமின்றி வழக்கமான குதூகலத்தைத் துவங்கிவிட்டது. சென்னை இசை மன்றத்தில் (மியூசிக் அகாடமி) 66-வது ஆண்டு இசை விழாவைத் துவக்கி வைக்கிறார், ஆளுநர் பி.என்.சிங். இந்திய நுண்கலைகள் சங்கம் வைரவிழா, தமிழிசை சங்கம் பொன் விழா என்று பழைய, புதிய பார்ப்பன கும்பல் கூத்தடிக்கிறது. ரோம் நகர் பற்றி எரியும் போது பிடில் வாசித்து மகிழ்ந்தானாம் நீரோ மன்னன். அதைப் போல நாட்டின் அவலத்தைக் கண்டுகொள்ளாது இசையில் ஆனந்தம் காணும் இத்தகைய வக்கிரக்காரர்களை ஒழிப்பது எப்போது?



படிப்பகம்